பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | பங்குனி 03 | ஞாயிற்றுக்கிழமை | 19.03.2023 | கதிர் 130

# நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சிறப்புரிமை மீறல் விவகாரம்

## கடும் எதிர்ப்பையும் மீறி உள்ளடக்கியது ஆட்சித் தரப்பு

(தன்வீன்)

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான நிதியை விடுவிக்க மறுக்கும் உரிமைக்கு திறைசேரிச் செயலர், மற்றும் துறைசார் அதிகாரிகள் சார்பில் சட்டமா அதிபருக்கும் உயர் நீதிமன்றம் தடை விதித்தமை நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் செயல் என்று எழுப்பப்பட்ட பிரச்சினை நாடாளுமன்றத்தின் அடுத்த வார அமர்வுக்கான நிகழ்ச்சி நிரலிலை வெளியிடும் ஒழுங்குப் புத்தகத்தில் உள்ளீர்க்கப்பட்டுள்ளது.

எதிர்க் கட்சிகளினதும் பொது அமைப்புக்களின் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் இந்த விடயத்தை ஆட்சித் தரப்பினர் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொண்டுள்ளனர்.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கான நிதியை விடுவிக்குமாறு உயர்நீதிமன்றம் விடுத்துள்ள இடைக்கால உத்தரவு சிறப்புரிமையை மீறுவதாக பொதுஜன பெரமுனவின் பிரேம்நாத் தொலவத்த கடந்த அமர்வின்போது சிறிப்புரிமை பிரச்சினை எழுப்பினார். அவரைத் தொடர்ந்து நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவும் சிறப்புரிமை பிரச்சினை எழுப்பி நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவை தடை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினார். ☞ 2

## இது ரகசியம் அல்ல!

பட்ட காலிலேயே படும் கெட்ட குடியே கெடும் என்றொரு சொலவடை தமிழில் உண்டு. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் இந்த விடயம் பொருத்தம். பாடசாலையின் இரண்டாவது மாடியிலிருந்து மாணவன் ஒருவன் குதித்த சம்பவத்தின் சூடும் அதனைத் திரித்து வேறு வகையான பிரச்சினையாக மாற்ற முற்பட்ட சூடும் தணிவதற்கு முன்னர் மற்றுமொரு பிரச்சினையும் கிளம்பியுள்ளது.

உயர் தர மாணவர்கள் பலர் வெள்ளிக்கிழமை பரீட்சை எழுத அனுமதிக்கப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டார்கள் என்பதே அந்தப் பிரச்சினை. ஆண்டிறுதிப் பரீட்சை என்பதால் தொண்டமானாறு வெளிக்களப் பயிற்சி நிலையத்தின் பொது வினாப் பத்திரம் மூலம் நடத்தப்படும் பரீட்சை அது. வியாழக்கிழமை பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் பலர் வெள்ளிக்கிழமைப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டோடு என்னை நாடினார்கள் பெற்றோர்.

60, 75, 80 பேர் வரையில் இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டார்கள் என்று எனக்குச் சொல்லப்பட்டது. ☞ 2

## யாழ். சிங்கள ம.வி. காணி இனி நிரந்தரமாகப் படையினருக்கு

### கையளிப்பதற்கான ஏற்பாடுகள் துரிதம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்ஷ் 19

யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலயப் பாடசாலை கட்டடம் முழுமையாகப் படையினரின் நிரந்தப் பாவனைக்காகக் கை மாற்றப்படுகின்றது.

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் கீழ் உள்ள சிங்கள மகா வித்தியாலயம் நீண்ட காலம் இயங்காத நிலையில் இருந்தது. 1995ஆம் ஆண்டில் படையிர் குடாநாட்டை கைப்பற்றியது முதல் தரைப் படையின் 512ஆவது பிரிகேட் படை முகாமாக செயல்பட்டு வருகின்றது.

இந்தப் பாடசா லைக் காணியை தரைப்படையினருக்கே நிரந்தரமாக வழங்குமாறு பாதுகாப்பு அமைச்சு கோரியதன் பெயரில் கொழும்பு சுற்றுலா மற்றும் காணி அமைச்சு இப் பாடசாலையை கையளிக்குமாறு கொழும்பு கல்வி அமைச்சை எழுத்தில் கோரியுள்ளது.

காணியைக் கையளிப்பதில் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சிற்கு ஆட்சேபனைகள் ஏதும் உள்ளனவா என்று கொழும்பு கல்வி அமைச்சு கேள்வி ☞ 2

## மகிந்தவின் ஆட்சியில் அனைவரும் கொள்ளையர்கள் ஆக்கப்பட்டனர்

### நாட்டின் தோல்விக்கு அதுவே காரணம் என்கிறார் சந்திரிகா



மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் கொள்கை ரீதியாக அனைவரும் கொள்ளையர்களாக்கப்பட்டனர், அப்படி அனைவரும் சேர்ந்து நிகழ்த்திய கொள்ளையினாலேயே நாடு இன்று தோல்வி அடைந்துள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க தெரிவித்தார்.

புதிய ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் இளைஞர் மாநாடு வெள்ளிக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:


நான் ஜனாதிபதிப் பதவியிலிருந்து விலகியதன் பின் னர் நீண்ட காலமாக அரசி யலிலிருந்து ஒதுங்கியிருந்தேன். அக்காலத்தில் நாட்டின் ஆட்சியாளர்களாக இருந்த கொள்ளையர்களுடன் கூட்டிணைந்து செயற்பட முடியாது என்பதனாலேயே அவ்வாறு ஒதுங்கி இருப்பதற்கு தீர்மானித்தேன். 2015இல் எனது மீள் வருகையுடன் அனைவரும் இணைந்து ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினோம்.

அதன் பின்னரும் 4 ஆண்டுகள் அரசியலிலிருந்து விலகியிருந்தேன். அப்போதும் ஊழல், மோசடிகள் நடைபெற்றன. இந்த நிலையில் தற்போது என்னை மீண்டும் களத்திற்கு அழைத்திருக்கின்றனர். ஆனால் இம்முறை என்னால் மாற்றமொன்று இடம்பெறுமா என்பது தெரியாதுள்ளது.

ஏனென்றால், இலங்கை தோல்வியடைந்த வொரு நாடாக அறிவிக்கப்பட்டுள்ளது. யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்கள் கொள்ளையர்களாகின்றனர். 1977களில் அரச சேவைகளிலில் காணப்பட்டவர்களில் 10 சதவீத மானவர்கள் ☞ 2

## உள்ளூராட்சி மன்றங்கள் கலைப்பால் ஆளுநர்களின் அதிகாரம் அதிகரிக்கும்

### பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு



உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டால் அதிகாரங்கள் பறிபோய்விட்டதாக கருத வேண்டியதில்லை. செயலாளர்கள் அதிகாரம் பெறுவார்கள். அத்துடன் ஆளுநர்களுக்கு காணப்படும் அதிகாரமும் சிறிய அளவில் மேலும் அதிகரிக்கும்.

இவ்வாறு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் ☞ 2

## ரணிலின் குழிபறிப்பால் ஏப். 25 தேர்தலும் இல்லை

### சாடுகிறார் அநுரகுமார திஸநாயக்க

ரணில் விக்கிரமசிங்கவின் குழிபறிப்புகளால் ஏப்ரல் 25 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலும் நடைபெறாது என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.



புதிய பாதையில் புதிய தொடக்கம் என்ற தொனிப் பொருளில் பல்கலைக்கழக சமூகத்தினரால் ஏற்பாடு செய்திருந்த கலந்துரையாடல் சனிக்கிழமை இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உஷ்ராயாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு ☞ 2

## சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து முதற்கட்டமாக 330 மில். டொலர்

### நாளை பணிப்பாளர் சபை அனுமதி கிடைக்குமென அரசு நம்பிக்கை

சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபையானது நாளையதினம் கூடவுள்ள நிலையில் இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான 2.9 பில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கான அனுமதி கிடைக்கவுள்ளதாக நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதி அனுமதி கிடைக்கப்பெற்றவுடன், இம்மாதத்திற்குள் 330 மில்லியன் டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்துடன் ☞ 2

## தேசபந்து தென்னக்கோன் அடுத்த பொலிஸ் மா அதிபராக எதிர்ப்பு

### குற்றச்சாட்டுக்கு உள்ளாகாத ஒருவரே அந்தப் பதவிக்கு வரவேண்டும் ஏன்கிறது சட்டத்தரணிகள் சங்கம்

அடுத்த பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிப்பதற்கு இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. பொலிஸார் மீது மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்பக்கூடிய, எந்தவொரு குற்றச்சாட்டுக்கும் உள்ளாகாத முன்மாதிரியான ஒருவரை அந்தப் பதவவிக்கு நியமிக்கவேண்டும் என்றும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

தேசபந்து தென்னக்கோனை அடுத்த பொலிஸ் மா அதிபராக நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்துள்ள நிலையில், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத் துள்ளது.

அந்தக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மார்ச் 23 முதல் வெற்றிடமாகவுள்ள பொலிஸ் மா அதிபர் பதவிக்கு மிகவும் பொருத்தமான நபரை நியமிப்பது மிக முக்கியமானது.

கடந்த தசாப்தத்தில் சுதந்திரமின்மை, அரசியல் தலையீடு, அடக்குமுறை, கொலைகள், தொழில் திறன் இன்மை போன்ற விடயங்களால் பொலிஸார் மீது நாட்டு மக்கள் நம்பிக்கையை இழந்து போனார்கள்.

நாட்டின் நிர்வாகத்தையும் சட்டத்தையும் ☞ 2

## 70 லட்சம் இலங்கையர்களுக்கு அத்தியாவசிய உதவி தேவை

### ஐ.நா. அலுவலகம் தெரிவிப்பு

நாடளாவிய ரீதியில் சுமார் 7 மில்லியன் மக்கள் அத்தியாவசிய உதவிகள் தேவைப்படும் நிலையில் இருக்கின்றனர் என்று மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த அலுவலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் பொருளாதார நெருக்கடியின் ☞ 2

## தமிழ் அரசுக் கட்சி கிளிநொச்சி செயலர் ரிஐடி விசாரணையில்

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளர் வீரவாகு விஜயகுமார், பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினரால் (ரி.ஐ.டி.) விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

விசாரணைக்கான காரணங்கள் எவையும் குறிப்பிடப்படாது, சனிக்கிழமை அவருக்கு வழங்கப்பட்டுள்ள எழுத்துமூல அழைப்பாணையில், வாக்குமூலம் ஒன்றைப் பெறுவதற்காக எதிர்வரும் மார்ச் 24 மு.ப. 9 மணிக்கு, பரந்தனில் அமைந்துள்ள பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப்பிரிவுக்கு சமுகமளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள, கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய மூன்று உள்ளூராட்சி மன்றங்களினதும் கௌரவ. தவிசாளர்கள் உள்ளிட்ட இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியைப் பிரதி நித்துவப்படுத்தும் ஒன்பது உறுப்பினர்கள் ☞ 2

## படையினரின் பிரச்சினைகளை தீர்ப்பதில் ஆட்சி தீவிர கவனம்

பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளும், தொழிற்சங்கப் போராட்டங்களுக்கு மத்தியிலும் படையினரின் தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குவதில் ஆட்சித் தரப்பு தீவிர கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆலோசனைகளை வழங்கியுள்ளார். அதற்கமைய சாகல ரத்நாயக்க தலைமையில் முப்படையினரின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் தொடர்பில் கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இதன் போது முப்படையினரின் தீர்க்கப்படாத 11 பிரச்சினைகள் குறித்து தெரிவிக்கப்பட்டதோடு, அவற்றில் இரண்டு தவிர்ந்த ஏனைய அனைத்திற்கும் தீர்வினை வழங்குவதற்கு சாகல ரத்நாயக்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

தம்மால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள், ☞ 2

## நீதித்துறை சுயாதீனத்தில் தலையீடுகள் வேண்டாம்

### இலங்கிலாந்து சட்ட அமைப்பு கொழும்பிடம் வலியுறுத்து

இலங்கை நாடாளுமன்றத்தின் தெரிவுக்குழு முன்பாக உயர் நீதிமன்ற நீதிபதிகளை அழைத்து விசாரணை செய்வதில் உள்ள பாரதூரத்தன்மை கருதி அந்த விடயம் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும், நீதித் துறையின் சுயாதீனமான செயற்பாடுகளில் தேவையற்ற தலையீடு இருக்கக்கூடாது என்று இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் சட்டத்தரணிகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையின், உயர் நீதி மன்ற நீதிபதிகள் மூவர் அடங்கிய அமர்வு மார்ச் 3 திறைசேரி செயலாளர் உள்ளூராட்சி தேர்தலுக்குரிய நிதியை வழங்குவதை நிறுத்தக்கூடாது என்று சட்டமா அதிபர்திணைக்களத்திற்கு இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தது.

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் மார்ச் 19 இடம்பெற்றிருக்கவேண்டும். ☞ 2

## 3 வாள்களுடன் 5 பேர் மானிப்பாயில் கைது



யாழ்ப்பாணம், மார்ச் 19

மூன்று வாள்களை மீட்டு ஐந்து பேரைத் தாம் கைது செய்துள்ளனர் என்று மானிப் பாய் பொலிஸார் தெரிவித்தனர். சனிக்கிழமை நடத்திய தேடுதலில் இவர்கள் அனைவரும் கைது ☞ 2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இதுதொடர்பில்மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை ஒழுக்கவிதிக் கோவைக்குஏற்பமாணவர்கள் பாடசாலைக்கு வரவில்லை என்கிறகாரணத்தால்அவர்கள் பரீட்சைஎழுதமுடியாதுஎன்று திருப்பியனுப்பப்பட்டிருக்கிறார்கள். நடந்த சம்பவம் உண்மை. ஆனால், அப்படி நடக்கப்போகிறது,நடவடிக்கை எடுக்கப்போகின்றோம், அதனால் மாணவர்கள் ஒழுக்க விதிக் கோவைக்கு ஏற்ப பாடசாலைக்குவரவேண்டும் என்கிற தகவல் அதற்குரிய வைபர் குழுவில் மார்ச் 16 நண்பகலே போடப்பட்டுவிட்டது என்றும் நள்ளிரவுக்குச் சமீபமாக மீண்டும் ஒரு நினைவூட்டல் போடப்பட்டது என்றும் அதன் பின்னரே நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும்பாடசாலைநிர்வாகம் தெரிவிக்கின்றது.

வெள்ளிக்கிழமைபரீட்சை எழுத வந்த மாணவர்களில் ஒழுக்க விதிக் கோவை நிபந்தனைகளுக்கு ஏற்ப வந்திருக்காத 40 வரையான மாணவர்களுக்கு, அவர்கள் முறைப்படி பாடசாலைக்கு வந்தாலே அவர்களை பரீட்சை எழுத அனுமதிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டதென்றும்- உடனடியாகத்திரும்பிச்சென்று தம்மைத் திருத்திக்கொண்டு முறைப்படிவந்தமாணவர்கள் தாமதமானபோதும் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டனர் என்றும் -

அதற்கான வசதியற்ற மாணவர்களின் பெற்றோருடன்தொடர்புகொள்வதற்கான அலைபேசிஎண்களைத்தருமாறுகேட்டபோதும்அவற்றைத் தராது சில மாணவர்கள் மட்டுமே திரும்பிச் சென்றனர், அவர்களின் எண்ணிக்கை அதிபட்சம்10பேராகஇருக்கும் என்றும் -

பாடசாலை நிர் வாக மட்டத்தில் விளக்கமளிக்கப்பட்டது. யாரையும் பரீட்சை எழுதக்கூடாது என்று மறிக்கவில்லை. முறைப்படி வந்து பரீட்சை எழுதுங்கள் என்றுதான் வலியுறுத்தப்பட்டது என்பதே பாடசாலையின் வாதம். அதில் நியாயம் இருக்கவும்கூடும். பாடசாலை சர்ச்சைகளுக்குள் சிக்கிக் கொண்டிருக்கக்கூடிய நிலையில் அதன் கட்டுப்பாடுகளை இறுக்கிப் பிடித்து, ஒழுங்குக்கட்டுப்பாட்டைநிலைநிறுத்த வேண்டிய தேவை நிர்வாகத்திற்கு இருக்கிறது என்பதும் ஏற்புடையதே.

எனினும்மாணவர்களின் ஒழுக்கம் எவ்வளவு முக்கியமோ அதேயளவிற்கு கல்வி மற்றும் பரீட்சைகளும் முக்கியம். அவர்களை கண்டிப் புடன் பரீட்சை எழுத அனுமதித்த பின்னர் பெற்றோரை அழைத்தோ அல்லது வேறு வழிகளிலோ அவர்களைத் திருத்துவதற்கான நடவடிக்கையை எடுத்திருக்க முடியும்,

இதுஆண்டிறுதிப்பரீட்சை, அதுவும் பொதுப் பரீட்சை அதில் அவர்கள் பெறும் புள்ளிகளைப் பொறுத்தே அவர்கள் ஒழுங்காகக் கற்கிறார்களா இல்லையா என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியும், பாடசாலையின் இந்த நடவடிக்கையால் அவையெல்லாம் பாழாகிவிட்டன, திருப்பி அனுப்பப்பட்ட மாணவர்கள் இந்த நடவடிக்கையால்மனதளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் அதுவும் அவர்களின் முடிவுகளைத் திசை திருப்பி விடும் வாய்ப்புக்களை ஏற்படுத்தும் என்பதையும் பாடசாலை கவனிக்க வேண்டும் என்பது பெற்றோர் தரப்பு வாதம். பாடசாலை நிரர்வாகத்திற்கு அது சமர்ப்பணம்.

கடந்த ஆண்டு தெற்கில் இதுபோன்றஒருஒழுக்காற்றுச் சம்பவத்தின் பின்னர் மாணவனின் பெற்றோர் நீதிமன்றத்தை நாடியபோது, ஒழுக்காற்று நடவடிக்கைக்காக பாடசாலைவகுப்புக்களுக்குத் தடை விதிப்பதோ பரீட்சை எழுத முடியாது என்று தடை விதிப்பதோ தவறு என்று நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்திருந்ததுடன் அதிபரையும் கண்டித்திருந்தது என்பதையும் சுட்டிக்காட்டும் பொறுப்பும் உள்ளது.

**- இடிமின்னல் -**

## நாடாளுமன்ற ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) இந்தப் பின்னணியில் சிறப்புரிமை குழுவுக்கு பிரேம்நாத் தொலவத்த மற்றும் செஹான் சேமசிங்கின் சிறப்புரிமை பிரச்சினைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில், அவைஅடுத்த வார அமர்வில் ஆராயப்படவுள்ளன.

அடுத்தவார அமர்வு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குப் பத்திரத்தில், நாடாளுமன்ற கூட்டத் தொடரை மார்ச் 21ஆம் திகதி செய்வாய்க்கிழமை முதல் 24ஆம் திகதி வரை கூட்டுவதற்குபிரதிசபாநாயகர் அஜித் ராஜபக்ஷதலைமையில்கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்ட நிலையில், நாடாளுமன்றம்மார்ச்21செவ்வாய்கிழமை காலை 9.30 மணிக்கு கூடவுள்ளதுடன் மு.ப 9.30 மணி முதல் மு.ப 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் பின்னர் மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.00 மணி வரை நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் நாடாளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல் தொடர்பில் விசாரிப்பதற்கும் அது தொடர்பில் பொருத்தமான விதப்புரைகளைச் சமர்ப்பிப்பதற்குமானநாடாளுமன்ற விசேட குழுவின் விதப்புரைகளைநடைமுறைப்படுத்தல் பற்றிய தீர்மானம் அங்கீகரிக்கப்படவுள்ளது.

அதனைத் தொடர்ந்து சட்டக்கல்விப் பேரவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் 2208 - 13ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில்வெளியிடப்பட்ட விதிகள்விவாதத்துக்குஎடுத்துக் கொள்ளப்படவுள்ளன. குறித்த வர்த்தமானி அறிவித்தலில் சட்டக்கல்லூரி மாணவர்கள் ஆங்கிலமொழியில்மாத்திரம் அனுமதிப்பரீட்சைக்குத்தோற்ற வேண்டும்ஆகியவிடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## யாழ். சிங்கள ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) எழுப்பியிருந்தது. அதற்குத் தமக்கு இதில் ஆட்சேபனை ஏதும் இல்லை என்று மாகாணக் கல்வி அமைச்சு பதிலளித்துள்ளது.

இதையடுத்து யாழ்ப்பாணம்வைத்தியசாலைவீதியில்உள்ளசிங்களமகாவித்தியாலய காணியைநிரந்தரமாகத் தரைப்படையினருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

## மகிந்தவின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கூட கொள்ளையர்களாக இருக்கவில்லை.

படிப்படியாகஅனைவரும் கொள்ளையர்களாக்கப்பட்டுள்ளனர். மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியிலேயே உச்சக் கட்டமான மாற்றங்கள் இடம் பெற்றன. அவரது ஆட்சி காலத்தில், முடிந்தவரை கொள்ளையிடுங்கள். ஆனால் அவைவெளிவரமால்பார்த்துக் கொள்ளுங்கள் என்றே அரச உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

அனைவரும் கொள்கை ரீதியில்கொள்ளையர்களாக்கப்பட்டனர். மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு,இரண்டாவதுஅமைச்சரவை கூட்டத்தின் போதே கொள்கையிலிருந்து விலகி கொள்ளையர்களாகுங்கள் என்றுதெரிவித்திருக்கின்றார். அவரதுஆட்சிகாலத்தில்அமைச்சர்கள் முதல், பிரதேச சபை உறுப்பினர்கள் வரையில் அனைவரும் தமக்குள் போட்டிபோட்டு கொள்ளையடித்துள்ளனர். இதனை தற்போதுசீர்செய்வதுகடினமாகும். எனினும் எம்மால் அதனை செய்ய முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. அதற்காக அனைவரும் கூட்டிணைந்து செயற்பட அழைப்பு விடுகின்றேன் - என்றார்.

## தேசபந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பாதுகாக்கவும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் பொலிஸார் மீது நாட்டு மக்களுக்குநம்பிக்கைஏற்படுவது அவசியம். குற்றவியல் வழக்குகள் உள்ள நபர் அல்லது சட்டத்திற்கு புறம்பான விடயங்களில் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் பொலிஸ்மா அதிபர் பதவிக்கு தகுதியற்றவர்.

பொலிஸ் மா அதிபர் மற்றும் ஏனைய தலைவர்களின் நியமனங்களும் மக்களின் நம்பிக்கையை கட்டியெழுப்பும் வகையில் வெளிப்படைத்தன்மையுடன் மேற்கொள்ளப்படவேண்டும்.

ஆகவே எந்தவொரு குற்றச்சாட்டுகளும் அற்ற முன்மாதிரியானவராகவும் இலங்கை பொலிஸார் மீது பொதுமக்களின்நம்பிக்கையை கட்டியெழுப்பக்கூடியவராகவும் அடுத்த பொலிஸ்மா அதிபர் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## உள்ளூராட்சி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அமைச்சரும், பிரதமருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அம்பாந்தோட்டையில் நடைபெற்ற கலந்துரையாடலொன்றில் சனிக்கிழமை பங்கேற்ற அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றங்களுக்கான காலம் நிறைவுக்கு வந்துள்ள நிலையில் அவை கலைக்கப்படவுள்ளன. ஞாயிற்றுக்கிழமை (இன்று) நள்ளிரவுடன் அவை கலைக்கப்பட்டுவிடும். இதனையடுத்து அதிகாரங்கள் பறிபோய் விட்டதாகக் கவலை அடைய வேண்டியதில்லை.

உள்ளூராட்சி மன்றங்களின் ஆணையாளர்கள் மற்றும்பிரதேசசெயலாளர்கள்அதிகாரங்களைப் பெறுவார்கள்.

ஆளுநர்களுக்கு காணப்படும் அதிகாரங்கள் உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டதன் பின்னர் சிறிதளவு அதிகரிக்கவுள்ளன. இவ்வாறான நிலையில் நாம் அனைத்து சபைகளின் தவிசாளர்களுடன் கலந்துரையாடவுள்ளோம். அத்துடன், தேர்தல்கள் திணைக்களத்துடனும் கலந்துரையாடி அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்போம் என்றார்.

## சர்வதேச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பல்வேறு மட்டங்களில் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. அதனடிப்படையில் பணியாளர் மட்ட உடன்பாடுகள் எட்டப்பட்டுள்ளன. எனினும் சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வதற்காக முன்வைக்கப்பட்டநிபந்தனைகளை நடைமுறைப்படுத்தல், இரு தரப்பு பெரும் கடன் வழங்குனர்களிடமிருந்து நிதி உத்தரவாதத்தைப் பெற்றுக் கொள்ளல் ஆகிய செயற்பாடுகளில்தாமதங்கள் ஏற்பட்டன.

இதனால் கடன் உதவியிலும் தாமதமங்கள் ஏற்பட்டிருந்தன. எனினும், கடந்த வாரம் சீனாவும் கடன் மறுசீரமைப்பிற்கான நிதி உத்தரவாதத்தை வழங்கியதையடுத்து, நாணய நிதியத்திடமிருந்து கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் எவ்விதமானபிரச்சினைகளும் தற்போது காணப்படவில்லை. ஆகவேசர்வதேசநாணயநிதியத்தின் உதவி நிச்சயமாக கிடைக்கப்பெறும் - என்றார்.

## ரணிலின் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை அரசமைப்பின் பிரகாரம் ஒத்திவைக்கவில்லை. தாம் வெற்றிபெறும் சந்தர்ப்பம் ஏற்படும் வரையில் அதனை ஒத்திவைப்பதே அவர்களின் இலக்காக உள்ளது. அந்த அடிப்படையில் ஏப்ரல் 25 தேர்தல் நடைபெறாது என்று தெளிவாகத் தெரிகின்றது.

அரசமைப்பின் பிரகாரம் ஆட்சியாளர்கள் தற்போது எதனையும் மேற்கொள்ளவில்லை. அதுவெறும் காகிதமாக மட்டுமே உள்ளது. தற்போது உயர் நீதிமன்றத்தில் மார்ச் மாதம் 3, மார்ச் 10 ஆகிய தினங்களில் வழங்கிய உத்தரவுகள் தொடர்பில் பிரச்சினைகளைக் கிளப்புகிறார்கள்.. தீர்ப்பு வழங்கிய நீதிபதிகளை சிறப்புரிமைப் பிரச்சினைகளை எழுப்பி விசாரணைக்கு உட்படுத்த முனைகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளை அவர்களால் ஆட்சியில் இருக்கும்வரைக்கும் முன்னெடுக்கமுடியும். ரணில் விக்கிரமசிங்க நூறு மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்க வந்திருப்பதாக கருதுகின்றார். அதில் முதற் சுற்றில் அவர் வெற்றி பெற்றுள்ளார். இரண்டாவது சுற்று ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதிலும்அவர் குழிகளை வெட்டியுள்ளதால் வெற்றி பெறுவார். ஆனால் இறுதிச் சுற்றில் அவர் சிக்கிக் கொள்வார். ஏனென்றால் இது நூறு மீற்றர் ஓட்டப்பந்தயம் அல்ல. அதுவொரு மரதன் ஓட்டப்போட்டி. இதில் மக்கள் மாற்றத்தினை எதிர்பார்க்கின்றார்கள். அந்தமாற்றத்தை எதிர்பார்க்கும் மக்களே இறுதியில் வெற்றி பெறுவார்கள் -என்றார்.

## 70 லட்சம் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விளைவாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 2.9 மில்லியன் மக்களுக்கு உதவும் நோக்கில் மனிதாபிமான விவகாரங்களை ஒருங்கிணைப்பதற்கான ஐக்கிய நாடுகள் அலுவலகத்தின் மனிதாபிமானத் தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் செயற்திட்டத்தின் ஊடாக இதுவரையில்98.1மில்லியன் டொலர் நிதி திரட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியினால் பெருமளவான மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குள்ளாகியுள்ளது. நாளாந்தக் கூலித்தொழில் வாய்ப்புக்களில் ஏற்பட்டிருக்கும் வீழ்ச்சியினால் பெரும் எண்ணிக்கையானோர் தமது வருமானத்தை இழந்திருக்கின்றபோதிலும், அன்றாட வாழ்க்கைச்செலவுதொடர்ந்து அதிகரித்துச்செல்கின்றது.

இதுசமூகத்தின்மத்தியில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும் அதேவேளை, பொதுமக்கள் தமது அன்றாட உணவுத்தேவையைப்பூர்த்தி செய்துகொள்வதற்குப் பல்வேறு மாற்றுவழிகளைக் கையாளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதேபோன்று கல்வி மற்றும் மருந்துப்பொருட்கள் உள்ளிட்ட சுகாதாரசேவை கிடைப்பனவில் நிலவும் சவால்கள் இன்னமும் தொடர்கின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் மனிதாபிமானத் தேவைகள் மற்றும் முன்னுரிமைகள் செயற்திட்டத்தின் ஊடாகக் கடந்த புதன்கிழமை வரையான காலப்பகுதியில் 1,246,000 பேர் உணவுக்கான அல்லது நிதிக்கான காசோலை உதவியைப் பெற்றிருக்கின்றார்கள்.

அதேபோன்று 973,000 பேர் விவசாய மற்றும் வாழ்வாதார உதவிகளையும், 2.3 மில்லியன் பேர் போசணைசார் உதவிகளையும், 311,000 பேர் சுகாதார உதவிகளையும், 564,000 பேர் கல்விசார் உதவிகளையும் பெற்றிருக்கின்றனர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## தமிழ் அரசுக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ரிஐடியினரால்விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நிலையில், கட்சியின் மாவட்டக் கிளைச்செயலாளராக இருந்து சமூகநலப் பணிகளிலும், அரசியற் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திவரும் வீரவாகு விஜயகுமார் அவர்களும் தற்போது விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளார் என்று கட்சியினர் தெரிவித்தனர்.

## 3 வாள்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) செய்யப்பட்டனர்.

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெற்றவாள்வெட்டுசம்பவம் ஒன்றில் தொடர்புபட்ட வட்டுக்கோட்டைபகுதியினை சேர்ந்த இருவர்பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் சுடலையில் மறைத்து வைத்திருந்த இரு வாள்களைப் பொலிஸார் மீட்டனர்.

மேலும்மானிப்பாய்நகர் பகுதியில் உள்ள கம்மாலை ஒன்றிலேயே வாளினைதயாரித்ததாகக் கூறியுள்ளனர். கம்மாலை உரிமையாளரைக் கைகது செய்த பொலிஸார் அவரிடமிருந்தும் ஒருவரை கைதுசெய்தநிலையில்குறித்த நபரிடமும் ஒரு வாளினை கைப்பற்றியிருந்தனர்.

கம்மாலை உரிமையாளருக்கு உதவி புரிந்த இளைஞர் ஒருவரையும் வாள்வெட்டிற்குபயன்படுத்திய மோட்டார்சைக்கிளினை உதிரிப்பாகங்களாக்கி வெவ்வேறு பகுதிகளில்இட்ட ஒருவரையும் ஏனமொத்தமாக ஐந்துபேரை மானிப்பாய் பொலிசார் இன்றையதினம்கைதுசெய்தனர்.

## படையினரின் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) சுமார் 7000 தரைப் படையினரைப் பாதித்துள்ள விடயங்கள் என்று கலந்துரையாடலின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் ஓய்வுபெற்ற முப்படையினருக்கு அவர்களுக்கான பகுதிகளில் 5 ஆண்டுகள் நிறைவடையாததால் 85 சதவீத ஓய்வூதிய இழப்புஏற்பட்டுள்ளதைமாற்றி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பரிசீலித்து விரிவானஅறிக்கையைஏப்ரல் 05க்குமுன்சமர்ப்பிக்குமாறு சாகல ரத்நாயக்க உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

பயங்கரவாத செயற்பாடுகளால் அல்லாத வேறு பணிகளில் ஈடுபட்டிருந்த போது உயிரிழந்த படையினரின் குடும்பத்தினருக்கு நிலையான கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு இரண்டு மாதங்களுக்குள் தீர்வு காண்பதெனத்தீர்மானிக்கப்பட்டது.

அதேபோன்று பணிகளில் ஈடுபட்டிருந்த நிலையில்அங்கவீனமுற்றபடையினருக்கான சம்பளத்தை தயாரிப்பதற்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டுள்ள சிக்கலால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கான சம்பளத்தை வழங்குமாறு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு படையினரின் பரிந்துரையைமாத்திரம்கவனத்தில் கொண்டுசம்பளத்தைவழங்க நடவடிக்கைஎடுக்குமாறுசாகல ரத்நாயக்க ஆலோசனை வழங்கியுள்ளார்.

இவ்வாறான ஒன்பது கோரிக்கைகளுக்கு தீர்வுகளை வழங்கிய சாகல ரத்நாயக்க, எஞ்சிய இரண்டு கோரிக்கைகள் தொடர்பிலும் விரிவான தகவல்கள் வழங்கப்பட்ட பின்னர் இந்த விடயம் குறித்து கலந்துரையாடப்படும் எனத் தெரிவித்துள்ளார்.

## நீதித்துறை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்துவதற்கான நிதியை இலங்கை நாடாளுமன்றம் ஒதுக்கீடு செய்திருந்தது. இருப்பினும் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை முன்னெடுப்பதற்கான நிதிக் குரிய கோரிக்கையை விடுத்த போதும் அது நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில், இலங்கைநாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சிறப்புரிமைப்பிரச்சினையை எழுப்பியுள்ளார். அதனைத் தொடர்ந்து குறித்த சிறப்புரிமைப் பிரச்சினை நாடாளுமன்றசிறப்புரிமைக்குழுவிற்கு சபாநாயகரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


குறித்த விசாரணை முடியும்வரையில்நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவுக்கு அமைவாகநடவடிக்கைகளை முன்னெடுப்பது கடுமையான குற்றமாகும் என்றும் அதனால் தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளுக்கும் எவ்விதமான செயற்பாடுகளையும் முன்னெடுக்கவேண்டாமென உத்தரவிடவேண்டும்என்றும் இலங்கை நிதி இராஜாங்க அமைச்சர் ஹொன் சேமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், 22ஆம் திகதிக்கு முன்னதாக நாடாளுமன்றத்தின் சிறப்புரிமைக் குழுவிற்கு உயர்நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின் நகலைச் சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றத்தின் பதிவாளரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நீதித்துறையின் சுதந்திரத்தினைமதிப்பதுஒருநாட்டு ஆட்சியாளர்களினதும்ஏனைய கட்டமைப்புக்களினதும் கடமையாகும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படைக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில்இலங்கையின் நீதித்துறையின் செயற்பாடுகளில்தேவையற்ற தலையீடுகள் இருக்ககூடாது என்பதோடு அதன் சுயாதீனத் தன்மை உறுதி செய்யப்பட வேண்டும். அத்துடன் நீதித்துறையின் தீர்மானங்களை மாற்றியமைப்பதற்குமுயற்சிப்பதும் மக்களாட்சிக்கு (ஜனநாயக) முரணாகும் - என்றுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622




காலைக்கதிர் Kalaikkathir

# நிரந்தரத் தீர்வு கிட்டும் வரை மாகாண சபைகள் வேண்டும்

## ஜே.வி.பி. யாழ்ப்பாணத்தில் தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

நாட்டிலுள்ள மக்களின் விருப்பம் இல்லாமல் இலங்கையும் இந்தியாவும் இணைந்துபலாத்காரமாகவே கொண்டு வந்த13 ஆவது திருத்தம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையப் போவதில்லை. ஆனால் எல்ல மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தீர்வு கிடைக்கும் வரை மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் எனத் தெரிவித்தார் ஜேவிபியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பிமல் ரத்நாயக்கா. எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் ஒரு தீர்வை ஏற்படுத்த புதிய அரசமைப்பு உருவாக்கப்படவேண்டும்என்றும் அவர் வலியுறுத்தினார்.

யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமைசெய்தியாளர்களிடம்பேசியயபோதேஅவர் இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலை ரணில் மகிந்த ஆட்சியாளர்கள் இனைந்து பிற்போட்டுஉள்ளனர். தேர்தல் ஒன்று நடந்திருந்தால் இந்த நாட்டை ஆட்சி செய்த கயவர்களிடம் இருந்து நாட்டை மீட்கும் காலமாக இது இருந்திருக்கும்.

ஜனாதிபதி ரணில் நாடாளுமன்றில் உரையாற்றுகிறபொழுது இப்ப வைப்பதற்கு தேர்தலும் இல்லை பணமும் இல்லை எனக் கூறியிருந்தார். ஆனலும் அதற்கு நீதிமன்றம் நல்ல பதில் கொடுத்தது. அதாவது தேர்தலுக்கான பணத்தை விடுவிக்ககோரியது. எனினும் நீதிமன்றதீர்ப்பை மீறி ரணில் ஆட்சி செயல்படுகின்றது.

இந்த நாட்டில் ஆட்சிகள் அமைவது தேர்தல் ஊடாகத்தான். இந்த ஜனாதிபதி வந்த பின்னர் 13 ஐ கொண்டு வருவதாக நாடகம் ஆடினார். ஆனால் உள்ளூர் மற்றும் மாகாண தேர்தலை நடத்த பின்னடிக்கின்றார்கள்.

தேர்தல் தொடர்பாக நடந்த ஆய்வில் நாங்கள் முன்னிலையில் இருப்பதே ஆட்சியாளர்கள் தேர்தலைப் பிற்போடுவதற்கு காரணம்.

குறிப்பாக அந்த ஆய்வில் ஜனாதிபதி ரணிலின் கட்சி கடைசியாக உள்ளது. மகிந்த தரப்பிற்கு அதாவதுமொட்டுக்கு ஒரு மந்திரிகூட கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று 1983 நாடாளுமன்றத் தேர்தலை நடத்தாமல் ஜனநாயகத்திற்கு ஏதிராக ஆட்சியாளர்கள் செயல்பட்டார்கள். 1983 இல் தேர்தலை நடத்தாமல் பின்னடித்ததுக்கு ஏதிராக மக்கள் போராடியபோது அதை கலவரமாக மாற்றினார்கள். வடக்கில் தெற்கில் போரைத் தொடங்கினார்கள்.

இன்றைக்கு உள்ளூராட்சித் தேர்தலை வைக்க பயப்படும் ரணில் வேறு எந்த தேர்தலையும் நடத்த போவதில்லை. இந்தக்கொடிய ஆட்சியை கலைக்க வடக்கு தெற்கு என எல்லோருக்கும் பொறுப்பு உள்ளது.

ஜனநாயக போராட்டங்களை மழுங்கடிக்க இந்த ஆட்சிக்கு எங்கு இருந்து பலம் வந்தது?

சட்ட ரீதியாக இல்லை. அரசியல்செல்வாக்குஇல்லை. இலங்கை மக்களிடம் இருந்து எந்த ஆதரவும் இல்லை. வெளிநாடுகளின் துணைதான் இவருக்குப் பலம்.

குறிப்பாக ஐஎம்எப் ஊடக இந்த நாட்டை ஆட்சி செய்ய அமெரிக்க முயச்சி செய்கிறது. ரணில் என்ற பொம்மையை வெளிநாடுகள் பாவிக்கின்றன. இந்திய ஆட்சியாளர்கள் இங்கு கடன்களை வழங்கியதற்காக இந்த நாட்டிலுள்ள மன்னார். பூநகரி. திருகோணமலை என வழங்கி விட்டார்கள். இந்திய பணத்தை இங்கு பாவனைக்கு கொண்டுவர முயச்சியும் நடக்கிறது. இந்திய மீனவர் ஆக்கிரமிப்பு அதிகரித்து வருகின்றது வடக்கின் மீன்வளம்கொள்ளையடிக்கப் படுகிறது.

போருக்குப் பின்ன ரான வடக்கில் எந்த தொழிற்சாலையும் தொடங்கப்படவில்லை. ஆனால், இந்திய மீனவர் இங்கு வந்து தொழில் செய்ய அனுமதிவழங்கநடவடிக்கை எடுத்து வருகின்றார்கள். ஐஎம்எப் இன் ஒப்பந்த அடிப்படைக்கு அமைவாக வரி, விலை அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தபடவேண்டும். அத்தோடு ரணில் மகிந்த அரசு கலைக்கபடவேண்டும். நடந்த எல்லா போராட்டங்களையும் முடக்கினார்கள் ஆனால் மார்ச் 15 போராட்டத்தில் வடக்கு உட்பட நாடு முழுவதும் முடங்கியது. வடக்கின் அரசியலில் மேலும் மக்கள் எங்களோடு இணைந்து இந்த அரசை விரட்ட முன்வர வேண்டும்.

இந்த நாட்டில் தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவது என்றால் நாட்டில் சம உரிமை மற்றும்ஜனநாயகம்ஊடாகவே முடியும். இலங்கையில் சிங்கள முஸ்லிம் தமிழகள் இடையே ஒற்றுமையை சம உரிமை மற்றும் ஜனநாயகத்தின் ஊடாகவே ஏற்படுத்த முடியும். அதனூடாகவே எல்லோருக்கும் சமமான உரிமைகிடைத்துள்ளனஎன்று ஏற்றுகொள்ளபடவேண்டும். இந்தநாடுபிரிபடாமல்அரசியல் அதிகாரம்கிடைக்கவேண்டும்.

13 ஐ இந்த நாட்டுக்கு பலாத்காரமாகக் கொண்டு வந்தார்கள். மக்கள் விருப்பம் இல்லாமல் கொண்டு வந்தார்கள். அதற்கு புலிகள்கூட விருப்பம் தெரிவிக்கவில்லை. இந்தியாவின் தலையீட்டால் இலங்கையின் அரசமைப்பிற்குள் உள்புகுத்தி உள்ளார்கள்.

இன்று அதற்கு 35 வயதாகியும் தேசிய பிரச்சினைக்கு இன்னும் தீர்வு இல்லை. நாட்டில் உள்ள எல்லா மக்களின் விருப்பத்துக்கும் மாறாக எதைக் கொண்டு வந்தாலும் அது இந்த நாட்டில் முக்கிய தீர்வாக அமையப் போவதில்லை. எல்லா மக்களும்ஏற்றுகொள்ளகூடியதீர்வு ஒன்றுவரும்வரைக்கும்இந்த மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும். அதன் ஊடாக ஒரு சிறிய உரிமை கிடைக்கும் - என்றார்.

# பிரிட்டன் சந்தையை அணுகுவதற்கு இலங்கையின் வாய்ப்பு விரிவாக்கம்

## அந்நாட்டு உயர்ஆணையர் அறிவிப்பு

பிரிட்டனால் வழங்கப்படும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான வர்த்தக செயற்திட்டத்தின் ஊடாக இலங்கையின் பல்துறைசார்ந்த வணிக நடவடிக்கைகள் பிரிட்டன் சந்தையை அணுகுவதற்கான வாய்ப்பு இலகுவாக்கப்படுமென இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனின் 'அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான வர்த்தக செயற்திட்டத்துக்கு' இலங்கை தெரிவு செய்யப்பட்டிருப்பதாக உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் அறிவித்துள்ளார்.

'அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான வர்த்தக செயற்திட்டம்' தொடர்பில் விளக்கமளிக்கும் வகையில் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்றிலேயே அவர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற போதிலும், பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்படாத பல்வேறு உற்பத்திகள் இலங்கையில் உள்ளன.

விசேட மதிப்பாய்வின் மூலம் இதில் காணப்படும் குறைபாடுகளைக் கண்டறியமுடியும். அதன்படி புதிதாக வழங்கப்படவுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கான வர்த்தக செயற்திட்டத்தின் முழுப்பயனையும் இலங்கை அடைந்துகொள்வதை உறுதிப்படுத்துவதில் பிரிட்டன் அவதானத்துடன் இருக்கின்றது என்றும் உயர்ஸ்தானிகர் சாரா ஹல்டன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் கருத்து வெளியிட்டுள்ள அவர் –

நாம் இந்தச் செயற்திட்டத்தை மேலும் இலகுபடுத்தியுள்ளோம். குறிப்பாக பிரிட்டனின் வர்த்தக முன்னுரிமை நடைமுறையின் பிரகாரம் வருடாந்தம் இறக்குமதிச்செலவினங்கள் பெருமளவால் குறைக்கப்பட்டிருப்பது அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளின் வணிகங்களுக்கு வாய்ப்பாக அமையும்.

அதுமாத்திரமன்றி பிரிட்டனிலுள்ள நுகர்வோர் உணவு மற்றும் ஆடை போன்ற வீட்டுப்பாவனைப் பொருள்களைக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்வதற்கும் இது உதவும். – என்று தெரிவித்துள்ளார்.

# சுற்றுலாவிகளிடம் பணம் பறிக்கும் 6 பேர் மாட்டினர்

சுற்றுலாப் பயணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் பலவந்தமாக வாகனங்களில் ஏற்றி பணம் சம்பாதிக்கும் 6 பேர் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் வைத்து விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தரகுப் பணம் வாங்கும் இந்தத் தரகர்கள், விமான நிலையத்தின் ஆரம்ப முனையத்தின் முன்பு காத்திருந்து, முகவர்கள் இல்லாமல் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை வாகனங்களில் ஏறும்படி வற்புறுத்தியதை அவதானிக்க முடிந்தது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதுமட்டுமல்லாமல் இலங்கைக்கு வரும் நபர்களின் பயணப்பொதிகளை வலுக்கட்டாயமாக ஏற்றி அவர்களை மிரட்டிப் பணம் பறிப்பதுடன், அவர்களுக்கும் பெரும் தொல்லை கொடுக்கும் வகையில் செயற்பட்டனர் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு செயற்படும் ஏனைய நபர்கள் அடையாளம் காணப்பட்டு உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் என குறித்த விசாரணையுடன் தொடர்புடைய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீதித்துறை சுயாதீனத்தை காப்பது அவசியம்

**தேர்தலுக்கான நிதி விடுவிப்பைத் தடை செய்யக்கூடாது என்று உயர் நீதிமன்றம் வழங்கிய கட்டளை நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் செயல் என்று ஆளும் தரப்பு உறுப்பினர்கள் சிலர் எழுப்பிய பிரச்சினை, நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனை விவாதத்திற்கு உட்படுத்தி நீதித்துறைக்கும் சட்டவாக்கல் துறைக்கும் இடையில் மோதல்களை உருவாக்கவேண்டாம் என்றும், அப்படிச் செய்வது நீதித் துறையின் சுயாதீனத்தில் தலையிடுவதாக அமைவதோடு நீதித்துறை மீது மக்களுக்கு இருக்கும் நம்பிக்கையையும் சீர்குலைத்துவிடும் என்று எதிர்க்கட்சிகள் காட்டுக்கூச்சல் போட்டாலும் அதை மதிக்காமல் ஆளும் தரப்பு நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் அதனையும் சேர்த்துக்கொண்டுள்ளது.**

**உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கு நீதிமன்றத்தின் கட்டளையை நிறுத்தி வைக்க வேண்டியது அவசியம் என்ற காரணத்தால் ஆட்சித் தரப்பு இந்தக் கைங்கரியத்தில் இறங்கியுள்ளது. இந்த நடவடிக்கை தவறு, பிழையான முன்னுதாரணம் என்பதை எதிர்க் கட்சிகள் மட்டுமல்ல, சட்டத் துறையினரும், வெளிநாடுகளில் உள்ள சட்டத்துறையினரும்கூடக் கண்டிக்கிறார்கள்.**

**இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் சட்டத்தரணிகள் பேரவை தனது அறிக்கையில் மிகத் தெளிவாக இதனை வலியுறுத்தியுள்ளது.**

**இலங்கை நாடாளுமன்றத்தின் தெரிவுக்குழு முன்பாக உயர் நீதிமன்ற நீதிபதிகளை அழைத்து விசாரணை செய்வதில் உள்ள பாரதூரத்தன்மை கருதி அந்த விடயம் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும், நீதித்துறையின் சுயாதீனமான செயற்பாடுகளில் தேவையற்ற தலையீடு இருக்கக்கூடாது என்று இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் சட்டத்தரணிகள் பேரவை வலியுறுத்தியுள்ளது.**

**நீதிமன்றக் கட்டளை குறித்த நாடாளுமன்றத்தின் விசாரணை முடியும் வரையில் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவுக்கு அமைவாக நடவடிக்கைகளை முன்னெடுப்பது கடுமையான குற்றமாகும் என்றும் அதனால் தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து அதிகாரிகளுக்கும் எவ்வித மான செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டாமென சபாநாயகர் உத்தரவிடவேண்டும் என்றும் இலங்கை நிதி இராஜாங்க அமைச்சர் ஹொான் சேமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.**

**அத்துடன், 22ஆம் திகதிக்கு முன்னதாக நாடாளுமன்றத்தின் சிறப்புரிமைக்குழுவிற்கு உயர்நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவின் நகலைச் சமர்ப்பிக்குமாறு உயர் நீதிமன்றத்தின் பதிவாளரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.**

**நீதித்துறையின் சுதந்திரத்தினை மதிப்பது ஒரு நாட்டு ஆட்சியாளர்களினதும் ஏனைய கட்டமைப்புக்களினதும் கடமையாகும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அடிப்படைக் கொள்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

**அதனடிப்படையில் இலங்கையின் நீதித்துறையின் செயற்பாடுகளில் தேவையற்ற தலையீடுகள் இருக்ககூடாது என்பதோடு அதன் சுயாதீனத் தன்மை உறுதி செய்யப்பட வேண்டும். அத்துடன் நீதித்துறையின் தீர்மானங்களை மாற்றியமைப்பதற்கு முயற்சிப்பதும் மக்களாட்சிக்கு (ஜனநாயக) முரணாகும் என்று விரிவாக எடுத்து விளக்குகிறது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் சட்டத்தரணிகள் பேரவை.**

**தமது அரசியல் தேவைக்காக குறுக்கு வழிகளை நாடும் இன்றைய அரசியல்வாதிகள் காதில் இந்த அறிக்கையும் செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் முடியும் என்பது திண்ணம். இருப்பினும் நீதித்துறையின் செயற்பாடுகளை நாடாளுமன்றத்தின் ஊடாக மலினப்படுத்தும் விதத்திலான இந்தச் செயற்பாட்டை ஆட்சியாளர்கள் உடனடியாக நிறுத்தவேண்டும். இல்லையேல் இது நாட்டை இன்னும் படுகுழியை நோக்கித் தள்ளிவிடும்.**

# தென்னிலங்கை ஏற்றுக்கொள்ளும் தமிழருக்கான தீர்வுதான் என்ன?

## ஜேவிபியிடம் கேட்கிறார் ரெலோ பேச்சாளர்

தென்னிலங்கை ஏற்றுக் கொண்டு தமிழருக்கு வழங்க முன்வந்த நிரந்தர அரசியல் தீர்வுதான் என்ன? அனுரகுமார திசாநாயக்கா சொல்வாரா? என ரெலோவின் ஊடகப் பேச்சாளர் கு.சுரேந்திரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தென்னிலங்கை நிராகரிக்கும் தீர்வு தமிழர்களுக்கு நிரந்தரத் தீர்வாக அமையாது என்று அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்திருக்கிறார். தென்னிலங்கை இதுவரையும் ஏற்றுக்கொண்டு தமிழ் மக்களுக்கு முன்வைத்த அரசியல் தீர்வுதான் என்ன என்பதற்கு அனுரகுமார திசாநாயக்கவால் கூற முடியுமா?

ஆகக் குறைந்தது தமிழ் மக்களுக்கு இந்த நாட்டிலே இனப் பிரச்சினை உள்ளது என்பதையும் தமிழ் மக்கள் இந்த நாட்டினுடைய ஒரு தேசிய இனம் என்பதையும் அவர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்து உடையவர்கள் என்பதையும் தங்களது கட்சியாவது ஏற்றுக் கொள்ளுமா?

தமிழர்கள் இந்த நாட்டின் தேசிய இனம் அல்ல அவர்கள் சுயநிர்ணய உரிமைக்கு உரித்தானவர்களும் அல்லர் என்பதை உங்களது கட்சியின் நிறுவுநர் மறைந்த ரோகன விஜயவீர கட்சியின் நிலைப்பாடாக அறிவித்தமையும் அதைத் தொடர்ந்தும் உங்களுடைய கட்சி பின்பற்றி வருவதையும் நீங்கள் அறியாமல் இல்லை.

மேலும் எமது அரசியல் தீர்வாக அமையாத 13ஆம் திருத்தச்சட்டம் நடைமுறைக்கு வந்த பொழுது வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிராகவும் மாகாண சபை முறைமைக்கு எதிராகவும், அது நாட்டை பிரித்து விடும் என்று தங்களது கட்சி ஆயுதமேந்தி போராடியதையும் நீங்கள் மறந்து இருக்க வாய்ப்பு இல்லை. இணைந்த வடக்கு கிழக்குக்கு எதிராக நீதிமன்ற மேறி வாதாடி அதைப் பிரிப்பதற்கும் தங்களுடைய கட்சி ஆற்றிய பங்கு பெருமளவு. அதைத் தமிழ் மக்கள் ஒரு பொழுதும் மறந்துவிடவில்லை.



தமிழ் மக்கள் இந்நாட்டின் ஒரு தேசிய இனம், அவர்களுக்கு இனப் பிரச்சினை உள்ளது, அது தீர்க்கப்படவேண்டும் என்ற சிந்தனை தென் இலங்கை அரசியல் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதற்குத் தீர்வாக எதனை பரிந்துரைத்துள்ளார்கள் என்ற கேள்விக்கு தங்களிடம் பதில் உள்ளதா? அல்லது அது சம்பந்தமாகத் தங்களுடைய கட்சியினுடைய தெளிவான நிலைப்பாடு என்ன என்பதை நீங்கள் எட்டியுள்ளீர்களா?

தங்கள் கட்சி ஆட்சி அமைத்து தென்னிலங்கையும் ஏற்றுக்கொண்ட அரசியல் தீர்வை தமிழ் மக்களுக்கு வழங்குவீர்கள் என்ற கானல் நீரை தமிழ் மக்கள் நம்பர் தயாராக இல்லை - என்றுள்ளது.

# அதிகாரத்தைத் தக்கவைப்பதே ஜனாதிபதியின் ஒரே எண்ணம்

## விஜித் விஜயமுனி சொய்சா சாட்டை

கொழும்பு, மார்ச் 19

உள்ளூராட்சிமன்றத் தேர்தலைக் காலம் தாழ்த்துவதற்கு அரசாங்கம் பல்வேறு வழிகளிலும் முயற்சித்து வருகிறது. எனினும் அவ்வாறு தேர்தலை நடத்தாமலிருக்க முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது அனைத்தையும் மறந்து எவ் வாறு அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளவது என்பதை மாத்திரமே நினைவில் வைத்திருக்கின்றார் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க் கட்சி தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தை நிறைவு செய்தார் என்றதற்காக நாட்டை ஆட்சி செய்ய முடியும் என்று கருத முடியாது. அவ்வாறு நம்பி நாட்டை ஒப்படைத்தமையின் காரணமாகவே இன்று இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் அரசாங்கத்தாலேயே இந்நாடு வங்குரோத்தடைந்துள்ளது என அறிவிக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

அது மாத்திரமன்றி தேசிய பாதுகாப்பும் கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. அம்பாந்தோட்டை துறைமுகத்தை அமைப்பதாகக் கூறி பணத்தை தமது சட்டைப் பைகளுக்குள் போட்டுக் கொண்டனரே தவிர, அதனால் எவ்வித பயனும் இல்லை. இவ்வாறானவற்றிலிருந்து நாட்டை மீட்டு முன்னேற்றக் கூடிய இயலுமை எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவிற்கு மாத்திரமே காணப்படுகிறது.



தற்போது இராஜதந்திர ரீதியிலும் வீழ்த்தப்பட்டுள்ள நாட்டைக் கட்டியெழுப்புவது மிகக் கடினமாகும். மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அமெரிக்க பிரஜைகள் இருவரால் இன்று நாடு இந்த நிலைமையை அடைந்துள்ளது. குடும்ப ஆட்சியை அமைப்பதற்கு முயற்சித்தமையின் காரணமாகவே நான் அவர்களிடமிருந்து பிரிந்து சென்றேன். யுத்த காலத்தில் கூட நாட்டில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படவில்லை.

தேர்தலை நடத்தாமலிருக்க முடியாது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு அதிகாரம் தேவைப்படும் போது தேர்தல் வேண்டும். அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் தேர்தல் வேண்டாம் என்றால் அதனை எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? அவர் தற்போது அனைத்தையும் மறந்து எவ்வாறு அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவது என்பதை மாத்திரமே நினைவில் வைத்திருக்கின்றார். - என்றார்.

# அத்தியாவசிய மருந்துகளைப் பெற்றுக்கொள்ள அமெரிக்காவின் ஆதரவை எதிர்பார்க்கின்றோம்!

## அந்த நாட்டுத் தூதரிடம் அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



கொழும்பு, மார்ச் 19

நாட்டின் சுகாதாரத் துறைக்கு அத்தியாவசியமான புற்றுநோய், இதய நோய் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான மருந்துகளைப் பெற்றுக்கொள்ள தேவையான ஆதரவை அமெரிக்காவிடமிருந்து எதிர்பார்ப்பதாக சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங்கிடம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுகாதாரத் துறையில் கொள்வனவு நடவடிக்கைகள் அதிக வெளிப்படைத் தன்மையுடன் வினைத்திறனுள்ளதாக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் மற்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவிற்கிடையிலான சந்திப்பு சுகாதார அமைச்சில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பின் போதே அமைச்சர் இந்த விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

அதற்கான வேலைத்திட்டங்கள் அந்தந்த நிறுவனங்களால் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும், இதன் ஊடாக சுகாதாரத் துறையில் உயர் மட்டத்திலான சேவைகளை இனிவரும் காலங்களில் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சுட்டிக்காட்டியுள்ளார்.

கொள்வனவு செயற்பாடுகளுக்கு அதிக கால அவகாசம் தேவைப்படுவதாகவும், அதற்கான கால அவகாசம் குறைந்தபட்ச நிலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும், 18 அனுமதிகளுக்கு அனுப்பப்பட்ட இந்த நடைமுறை சம்பந்தப்பட்ட நிபுணர்களின் கருத்துக்களால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

தரம், சேமிப்பு வசதிகள் தொடர்பான பாதுகாப்பு போன்றவற்றில் அதிக அக்கறை உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். முற்பதிவு செயற்பாட்டின்போது அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு எமது தேவை மற்றும் அதற்கான விநியோகம் மதிப்பிடப்பட்டுள்ளது.

மருந்துகளின் தரம் பாதிக்கப்படாமல் இருப்பதற்காகவும், சேமிப்பில் பாதுகாப்பு பிரச்சினைகள் ஏற்படாத வகையிலும் முற்பதிவுகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.


OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் அதி வேகமாக
விற்பனையாகும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

# மசகு எண்ணெய் விலை உலக சந்தையில் வீழ்ச்சி!

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை சற்று வீழ்ச்சியை சந்தித்து ப்ரென்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை, 72.97 அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது.

டபிள்யூ. ரி. ஐ மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 1.61 டொலரால் குறைவடைந்து, 66.74 அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது.

வங்கித் துறைகளின் வீழ்ச்சி தொடர்பாக ஏற்பட்ட சந்தேகத்தை அடுத்து, உலக சந்தையில் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்துள்ளதாக சர்வதேசத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# கொழும்பு துறைமுகத்துக்கு சில்வர் ஸ்பிரிட் கப்பல் !

500 சுற்றுலா பயணிகள் மற்றும் 410 பணியாளர்களுடன் சில்வர் ஸ்பிரிட் பயணிகள்கப்பல்சனிக்கிழமை காலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

இந்த கப்பல் கடந்த 16 ஆம் திகதி அமெரிக்காவில் இருந்து சென்னை வழி-யாகத் திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்த இந்த கப்பல் இன்று (ஞாயிற்றுக்கிழமை) நாட்டை விட்டு புறப்பட உள்ளது.

# 59 ஆயிரத்து 103 மெற்றிக்தொன் நெல் கிளிநொச்சி மாவட்டத்தில் அறுவடை!

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த கால போகத்தில் 59 ஆயிரத்து 103 மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக்குளம் உள்ளிட்ட பாரிய மற்றும் நடுத்தர சிறிய நீர்பாசன குளங்களின் கீழும் மானாவாரி பயிர் செய்கை நிலங்களின் கீழும் இம்முறை மொத்தமாக 26 ஆயிரத்து 582 கெக்ரேயர் நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு அறுவடைகள் நிறைவுறுத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் அறுவடை செய்த நெல்லை விவசாயிகள் மிகக் குறைந்த விலைகளிலேயே விற்பனை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. தொடர்ந்தும் நெல்லுக்கான உரிய விலை கிடைக்காமையால் விவசாயிகள் பாரிய நட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர்.

கடந்த கால போக அறுவடையின் போது 59103.85 மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட செயலக புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது கடந்த பெரும் போகத்தின் போது 26585.40 கெக்ரேயர் நிலப்பரப்பில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட நிலையில் வரட்சி மற்றும் நோய்த்தாக்கம் இயற்கை அழிவுகள் தவிர 25919.20 கெக்ரேயர் நிலப்பரப்பில் அறுவடைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட அறுவடைகளின் மூலம் 59103.85 மெற்றிக் தொன் நெல் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட செயலகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நிலக்கரியுடன் 2 கப்பல்கள் நாட்டை வந்தடைந்தன!

நிலக்கரியுடன் மேலும் இரண்டு கப்பல்கள் நாட்டை வந்தடைந்துள்ளன என, இலங்கை நிலக்கரி நிறுவனத்தின் தலைவர் ஹொான் சுமனசேகர தெரிவித்துள்ளனர்.

வெள்ளிக்கிழமை இரவு கப்பலொன்றும் மற்றைய கப்பல் நேற்று காலையும் நாட்டை வந்தடைந்தன. நேற்று காலை நாட்டுக்கு வருகை தந்த நிலக்கரி கடன் வசதியின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டது.

கடன் வசதியின் அடிப்படையில் மேலும் 08 நிலக்கரி கப்பல்கள் நாட்டுக்கு வருகை தரவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

நாட்டுக்கு வருகை தந்த இரண்டு கப்பல்களிலும் தலா 60 ஆயிரம் மெற்றிக் தொன் நிலக்கரி கொண்டு வரப்பட்டுள்ளது.

கடன் வசதியின் அடிப்படையில், மேலும் 30 கப்பல்களை ஏப்ரல் 30 ஆம் திகதிக்குள் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

# போதைப் பொருள், வன்முறைகளை கட்டுப்படுத்துவோம்; டக்ளஸ் திட்டம்!



யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ்.மட்டத்தில்போதைப் பொருள் பாவனை மற்றும் வன்முறைச்சம்பவங்களுக்கு முடிவுகட்டுவோம்எனஅமைச்சர் டக்ளஸ்தேவானந்தா தெரிவித்துள்ளார்.

செங்குந்தாஇந்துகல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வை அடுத்துஉரையாற்றியபோதே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு கூறியுள்ளார்.

ஆயுதப் போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் எனத் தொடங்கி தற்போது ஜனநாயக வழியில் அரசியல் தீர்வு முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் யாழ்.மாவட்டத்தில் போதைப் பொருள் மற்றும் வன்முறைச் சம்பவங்களுக்கு முடிவு கட்ட பொதுமக்கள் ஒத்துழைப்பு அவசியம் என்றும் கூறியுள்ளார்.







கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 19th of March 2023


We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

## Read the following passage and Answer: the question that follows.



This is the story of a man who thought that he had the right to do whatever he liked. One day, this gentleman was walking along a busy road, spinning his walking-stick round and round in his hand, and was trying to look important. A man walking behind him objected.

"You ought not to spin your walking-stick round and round like that!" he said.

"I am free to do what I like with my walking-stick," argued the gentleman.

'Of course, you are," said the other man, "but you ought to know that your freedom ends where my nose begins."

The story tells us that we can enjoy our rights and our freedom only if they do not interfere with other people's rights and freedom.

***A. Answer the following questions.***

1. 1. Why was the gentleman on the road moving his walking stick round and round?
2. Who objected to his behaviour?
3. What argument did the gentleman give?
4. Was the other satisfied with argument?
5. What did he say in reply?

***B. Complete the following statements with the correct option.***

1. The gentleman was walking along a
   i. lonely road.
   ii. busy road.
   iii. narrow road.
2. The gentleman was
   i. running along the road.
   ii. disturbing others on the road.
   iii. spinning his walking-stick round and round.
3. The man who protested was a
   i. teacher.
   ii. passer-by.
   iii. policeman.

***C. Write whether the following statements are true or false.***

1. The gentleman was spinning the walking-stick round and round in his hand to drive away the dogs
2. The gentleman was walking along a busy road
3. The man walking behind praised his action
4. The gentleman thought that he had the right to do whatever he liked.
5. We can enjoy our rights and freedom even if it interferes with other people's rights and freedom

***D. Write synonyms of the following words.***

1. Spinning
2. Interfere

Answer:

1. Spinning—Moving
2. Interfere—Meddle




At this stage of civilization, when many nations are brought in to close and vital contact for good and evil, it is essential, as never before, that their gross ignorance of one another should be diminished, that they should begin to understand a little of one another's historical experience and resulting mentality. It is the fault of the English to expect the people of other countries to react as they do, to political and international situations.

Our genuine goodwill and good intentions are often brought to nothing because we expect other people to be like us. This would be corrected if we knew the history, not necessarily in detail but in broad outlines, of the social and political conditions which have given to each nation its present character.

1. According to the author of Mentality' of a nation is mainly a product of it's
(a) present character
(b) international position
(c) politics
(d) history

2. The character of a nation is the result of its
(a) gross ignorance
(b) cultural heritage
(c) socio-political conditions
(d) mentality

3. The need for a greater understanding between nations
(a) is more today than ever before
(b) was always there
(c) is no longer there
(d) will always be there

4. Englishmen like others to react to political situations like.
(a) others
(b) us
(c) themselves
(d) each others

5. According to the author his countrymen should.
(a) read the story of other nations
(b) not react to other actions
(c) have a better understanding of other nations
(d) have vital contacts with other nations





A homeopathy is a form of alternative medicine, first proposed by German physician Samuel Hahnemann in 1796 that attempts to treat patients with heavily diluted medicines. Homeopathic remedies are prepared by serial dilution with shaking by forceful striking, which homeopaths term succession after each dilution under the assumption that this increases the effect of the treatment. Homeopaths call this process potentization. Dilution often continues until none of the original substance remains.

Homeopathic reference books known as repertories are then consulted, and a remedy is selected based on the totality of symptoms. Homeopathic remedies are considered safe, but are criticized for putting patients at risk due to advice against conventional medicine such as vaccinations, anti-malarial drugs, and antibiotics. Depending on the dilution, homeopathic remedies may not contain any pharmacologically active molecules, and for such remedies to have pharmacological effect would violate fundamental principles of science.

Modern homeopaths have proposed that 'water has a memory that allows homeopathic preparations to work without any of the original substance; however, there are no verified observations nor scientifically plausible physical mechanisms for such a phenomenon. The lack of convincing scientific evidence supporting homeopathy's efficacy and its use of remedies lacking active ingredients have caused homeopathy to be described as pseudoscience.

1. Homeopathy treats patients with:
(a) Heavy medicine
(b) strong medicine
(c) diluted medicine
(d) concentrated medicine

2. Homeopathic remedies are prepared by serial dilution with shaking by forceful striking, the procedure is known as
(a) Succession
(b) potentization
(c) dilution
(d) convention

3. A report of UK states that homeopathy is not more useful than a placebo because after dilution the medicine don't contain any.
(a) chemical
(b) acid
(c) pharmacologically active substance
(d) vaccine against diseases

4. Homeopathy is also termed as pseudoscience because:
(a) it is based on false notions effectiveness
(b) it lacks scientific evidence on its
(c) it has side effects
(d) it is a slow treatment

5. The word in the passage which means the same as the facts /objects that make you believe that something is true:
(a) Pharmacolo
(b) placebo
(c) accredited
(d) evidence

"konwledge isn't free. You have to pay attention"

# *Read the following passage and Answer: the question that follows.*



My next pet was a pigeon, the most revolting bird to look at, with his feathers pushing through the wrinkled scarlet skin, mixed with the horrible yellow down that covers baby pigeons and makes them look as though they have been peroxiding their hair. Because of his repulsive and obese appearance, we called him Quasimodo. Since he had an unorthodox upbringing, without parents to teach him, Quasimodo became convinced that he was not a bird at all, and refused to fly. He walked everywhere. He was always eager to join us in anything we did.

He would even try to come for walks with us. So you had to either carry him on your shoulder, which was risking an accident to your clothes, or else you let him walk behind. If you let him walk, then you had to slow down your own pace to suit his, for should you get too far ahead you would hear the most frantic and imploring coos and turn around to find Quasimodo running desperately after you.

1. The narrator describes the pigeon as a 'revolting bird' because
(a) he could not fly
(b) he had to be carried everywhere
(c) he had wrinkled skin covered with yellow feathers
(d) he was fat

2. Quasimodo got his name because
(a) he was a fat and ugly
(b) he was attractive
(c) he could not fly,
(d) he love behaving like human beings

3. We know that Quasimodo was always eager to go on walks because
(a) he walked everywhere
(b) he did not know how to fly
(c) he complained loudly if he was not taken along
(d) he always copied whatever humans did



4. Quasimodo protested when he was
(a) left at home
(b) lifted on human shoulders
(c) taken for a walk
(d) left behind during walks

5. The phrase 'risking an accident to your clothes' means
(a) the bird pecked at their clothes
(b) there was a chance of the bird soiling their clothes
(c) the bird risked a fall
(d) the bird did not like their clothes



The idea of euthanasia, of hastening the death of someone from motives of compassion, covers two main situations. The first is where someone is close to death and can be kept alive briefly, with intensive medical care. The official reason for the use of every possible technique on patients, for whom there seems no hope, is that we never know that there is no hope of at least a brief recovery. The second situation, in which it is proposed to end the life of someone who is not expected to die at once from natural causes, is more morally doubtful.

In so far as the suggestion may be based on the notion of the 'quality of life' experienced by the patient, this is an inadequate approach to human beings. At one extreme we may be dealing with a birth that cannot be called 'human' at all: such a being likely to live at the most for only a few hours. Many feel that during this time it ought to be given ordinary nursing care. Bringing to an end of the life of say, a spastic child, by the deliberate refusal of the fullest medical care seems morally indefensible.

1. Euthanasia means
(a) a place in Asia
(b) bringing about gentle and easy death
(c) enthusiasm
(d) the youth in Asia

2. One reason for trying all possible measures to save a person is
(a) death is horrifying
(b) there is a possibility of recovery
(c) doctors need to be compassionate
(d) science may invent more sophisticated machines later

3. The people who argue for euthanasia advocate it saying
(a) the patient is not living a qualitative life
(b) we must not spend quality resources on a sick person
(c) we should not bother about the ailing
(d) it can be defended morally

4. The words ….dealing with a birth that cannot be called 'human at all implies
(a) humans have no control over birth and death
(b) the person may survive only for a very brief period
(c) doctors are incapable of saving people
(d) the patient may want to die

5. The writer finds it unpardonable to
(a) end the life of someone who is not expected to die at once from natural causes.
(b) end the life of a spastic child
(c) end the life of an infant who is likely to live only for a few hours
(d) end the life of a human being



A telephone conversation between two friends, Sanjay and Pankaj, took place on a Thursday afternoon. Sanjay: Hello Pankaj. How are you? You have been absent from school for the last 2 days. Pankaj: Hi Şanjay! I had food poisoning. Anyway, I'm better now and will be going back to school tomorrow. Sanjay: Did you eat something which was contaminated? Pankaj: Well, I took fried oyster and some noodles at the food centre on Tuesday night. Most likely, it was the former.

It could not have been the chicken rice or fishballs I took at our school canteen during recess. Sanjay: Oh, I see. Pankaj: Can you please tell me if there's any homework to be done? Sanjay: Yes, Mrs. Boon is going to conduct a Science test for our class tomorrow. Pankaj: Thanks for letting me know. Did she say which chapters will be tested? Sanjay: Yes, she did. The test is going to cover the chapters on "Magnets", "Classification of Materials" and "Life Cycles of Plants". Pankaj: That's a relief. I am only unfamiliar with the chapter on "Magnets". A quick revision is all I'll need. Thanks and see you tomorrow. Sanjay: You're welcome. Bye and take care.

1. Why did Pankaj call Sanjay? She called Sanjay to find out if
(a) Mrs. Boon had given the class any home work.
(b) Mrs. Boon was going to conduct a class test.
(c) there was going to be a class test.
(d) there was any homework.

2. Sanjay and Pankaj are
(a) Best friends
(b) schoolmates
(c) neighbors
(d) classmates

3. Why was Pankaj relieved upon learning the chapters to be tested? She was relieved because
(a) she had already studied all the chapters thoroughly
(b) she was good at the subject
(c) she had already studied one of the chap ters to be tested
(d) she was familiar with two of the chapters to be tested

4. What did Pankaj suspect was the cause of her food poisoning? She suspected that it was the ___ which she had eaten.
(a) Noodles
(b) fishballs
(c) fried oysters
(d) chicken rice

5. On which days were Pankaj absent from school? She was absent on
(a) Monday and Tuesday
(b) Tuesday and Wednesday
(c) Wednesday and Thursday
(d) Thursday and Friday

# 20+ Most Amazing Benefits of Trees That Are 100% True



Trees are nature's most precious creations. Trees are here on earth a few million years before the arrival of humankind and are an extremely crucial part of the ecology and its functioning. It is impossible to imagine the existence of any life forms on the face of the earth without the trees. Benefits of trees are uncountable, but this article will capture 20+ most amazing contributions of trees to help you understand why we need to plant and care for trees.

20+ Amazing Benefits of Trees

**1. Trees Are Our Only Source of Oxygen**

Creatures on the earth are alive because they inhale oxygen from the air, which helps run their bodily mechanisms and exhale carbon dioxide as a by-product of the function of the body. Nature's only source of oxygen is the trees. Through a process called photosynthesis, trees prepare food for their survival.

This process requires carbon dioxide from the air as a material and produces oxygen as a by-product. Trees emit this gas into the air, increasing its proportion and thereby meeting the need of the living creatures. An acre of land full of mature trees can produce enough oxygen for 18 people in a year.

**2. Trees Absorb Other Harmful Gases**

Trees absorb pollutant gases like nitrogen oxides, sulfur dioxide, ammonia, and ozone from the air and purify it. They filter particulates out of the air and trap them on their barks and leaves.

**3. Trees are Source of Food and Nutrition**

Trees are the major source of food and nutrition, not only for human beings but also for birds and animals. The fruits borne by the trees are consumed by humans and wildlife alike. If we look into our daily lives, we can see that apart from meats and dairy products, everything we eat comes from trees and plants.

Even the nutrition that we gain from meat and dairy products emanate from the trees as the animals from which these food materials are drawn live on plants, grasses, and trees. Food items that trees offer us have all the necessary protein, carbohydrate, and fat along with vitamins and minerals to keep the body healthy and active.

**4. Trees are Primary Source of Energy**

Trees provide woods which are a primary source of energy in rural areas. Prior to the production of electricity, woods were the only source of energy for human beings. Moreover, trees are one of the essential components of fossil fuels, which is the primary source of energy in modern civilization.

**5. Trees Help Conserve Energy**

Trees sprinkle water through their pores on the leaves which are generated in the process of photosynthesis. These water particles keep the air cold and moist and lower the temperature. Thus, more trees mean less heat and even lesser requirement of air cooling machines like air conditioners, which means conservation of energy.

**6. Trees Provide Shelter**

Trees are great shelters for human and animals alike. Birds make their nests on the branches and stems of the trees. People can rest beneath the tree on scorching summer days. Besides, parts of trees are also used to make houses. In rural areas, people use leaves, branches, and wood of the trees to build homes.

In urban areas also wood is the major component in making doors, windows, floors of the houses. Woods are also used to make furniture and even modes of transportation like ships. However, keeping in mind the ill effects of indiscriminate cutting of the trees for human use, alternative materials are now applied for the said purposes.

**7. Trees Provide Livelihood to People**

People earn their living harvesting and plucking fruits from the trees and practicing agricultural activities. There are many small business opportunities that are based on farm products like food processing industry.

Large scale industries like textile industry are based on the production of cotton, the sugar industry has the primary source of material as sugar cane, and jute industry uses jute as their sole raw material to produce various products. Then we have the handicraft industry which uses woods to create magnificent art pieces.

**8. Trees are Healer of Diseases**

Plants and trees have a plethora of medicinal values. They can heal patients from deadly diseases. Human beings have produced medicines to protect themselves from diseases using these therapeutic properties of the trees. Neem is one such tree that has enumerable health benefits.

**9. Trees Help Save Underground Water**

Trees are the most significant factor contributing to the formation of cloud and rainfall. As there is more rainfall, the possibility of having the right groundwater level is high. Besides, trees catch water and snow in their leaves and send the purified water to the aquifer through the roots. Planting trees is the eco-friendliest method of ensuring efficient conservation of groundwater level.

**10. Trees Prevent Soil Erosion**

The roots of the trees hold the soil on which they grow very strongly. This prevents the erosion of soil due to rain, flood, and air movements. As a result, events such as landslides on the hilly regions tend to get lower. Moreover, by preventing soil erosion, trees reduce pollution levels, protect loss of fertile land, and slow down the process of sedimentation on rivers and streams.

**11. Trees Protect Eyesight**

The color green is perfect for the eyes. It has a soothing effect on them and helps them function better. Moreover, trees absorb dust from the air and thereby reduces glare which again minimizes the stress on the eyes.

**12. Trees Block Sound**

Trees block sound in the jungle of their leaves and thus reduce noise pollution, which can be as much as 40 percent.

**13. Trees Safeguard Our Environment From Climate Change**

The recent heating up of the planet due to the rise in the concentration of greenhouse gasses in the atmosphere is radically changing the climate of the earth. Trees are the best solution to prevent this disaster from progressing.

**14. Trees Prevent Development of Deserts**

Deserts are highly inhabitable places of the earth. Growing trees can transform them into an oasis and make them far more productive and habitable.

**15. Trees Enhance Fertility of Soil**

The decaying leaves and other parts of the tree add to the fertility of the soil and improves soil microorganisms.

**16. Trees Provide Better Animal Habitat**

Increased number of trees create better habitat for birds and animals and allow them to grow.

**17. Trees Improve Quality of Life**

Trees improve the environment of the surrounding, truncate the pollution level, reduce energy cost, beautify the place, and also increase the value of a property. It thus contributes heavily to improving the quality of life.

**18. Trees are the Least Expensive Decoration**

Plants and trees are the least expensive decorative items that one can use to furnish one's residence or locality. They offer benefits that can never be estimated in terms of money.

**19. Trees are Our Teacher and Playmate**

Trees are the best place to find peace and solitude. Since ages, sages and philosophers have found their knowledge and wisdom meditating under the trees. Lord Buddha achieved his divine knowledge under a bodhi tree. Teachers in ancient times used to teach sitting under the trees.

**20. Trees Act as Binding Force**

Trees bring together people of diverse culture and communities effectively. Planting and nurturing tress not only empowers them but also develops community feeling among them.

**21. Trees Make Cities More Liveable**

Cities are usually dingy, noisy, and crowded. Trees add a sense of freshness and clear the air of dust and pollution to make them more liveable.

**Other Important Benefits of Trees**

Lowering the crime rate by enhancing community pride and increasing income opportunities.

Protecting people from the harmful ultraviolet rays of the sun.

Lowering dews and frosts in agricultural areas.

Ensuring the sustainability of the human race along with its cohabitants.

## அலைமோதும் காதல்

ஆழியின் அத்தியாயங்களைப்
புரட்டுகின்ற நொடிகளில்
காதலுக்கான காத்திருப்புகளை
சுருட்டிக் கொண்ட
பேரலைகளுக்குள்
உறங்கிக் கொள்ளலாம்
வா ..
ஒரு விண்னுந்தின் புகை
சிலநிமிடங்களில்மறைவதற்குமுன்பு
அங்கே வானவில்லின் வண்ணங்களில்
சுரஸ்த்தானம் எழுதிவிடலாம்
வா..
வலசை சென்ற
கோடைகாலப் பறவைகளின்
காதல் மொழிகளை
குளிர்காலப் பறவைகளால்
மட்டுமே உணரமுடியும்
கூடலில் கட்டுண்டு கிடக்கும்
அலைகளின்
வெப்ப இறகுகளின் ரேகைகளில்
எழுதப்பட்டிருக்கும்காமசூத்திரத்தை
சேர்ந்தே படித்திடலாம்
வா ..

பச்சைத்திராட்சைகளின் சாறு
பல வருடங்களாக
குடுவையுள் நிரம்பிக்கிடக்கிறது
மதுவங்கள் குளித்து நொதித்த
ரசத்தை ரசித்தே உறிஞ்சிடலாம்
வா ..

இதுவரை நான் எழுதியவை
கவிதை என நீ நினைத்தால்
அதற்கான தலைப்பை
நீயே வைத்துவிடேன்
வா ..

நிம்மி சிவா -
( கண்ணம்மா )

## சுட்ட கவிதை பிரமாதம்

இணையம் முழுக்க
மழையாய் பொழியும்
சொல்லின் துளிகளில்
வல்லவை சுட்டு
கட்டுமானம்
குழம்பா வடிவ
அத்திவாரம்
அழகாய் இட்டு
எழுதி எழுதி இடித்த
சுவற்றில்
எஞ்சிக் கிடப்பதை
பூரணப்படுத்த
சுட்டதில் இடைக்கிடை
கல்லாய்ப் பொருத்தி
கட்டிய வீட்டுக்
கவிதைக்குள் மகிழ்ந்து
அட்டைப் படத்தில்
ஆகாசம் விரிய
பார்த்தோர் பலரும்
தலைப்பில் அசர
சனங்கள் புகழ
சங்கடம் அற்று
விற்றார் கவிதை
வியந்தார் மற்றோர்.
எட்டி நின்றது
இயல்பாய் பிறந்தது.

பாலையூற்று அஷ்ரபா நூர்தீன்

# ஷெல்லிதாசனின் எங்களில் ஒருத்தி

### சிறுகதைத் தொகுப்பு மீதான ஒரு பார்வை




132 பக்கங்களை கொண்டது. மொத்தம் 11 சிறுகதை களை உள்ளடக்கிய ஷெல்லிதாசனின் சிறுகதை தொகுப்புத்தான் எங்களில் ஒருத்தி. இந்த வாரம் அது குறித்து பார்ப்போம்.

**'சுந்தரகாண்டம்'**

குறி சொல்லுதல், மக்களை ஏமாற்றிபிழைக்கும்பிழைப்புஎவ்வாறு சமூகத்தை பாதிக்கின்றது. அவ்வாறு பாதிப்புகள் நடைபெற்றாலும் எம் மக்களின் நம்பிக்கை ஏமாற்றங்களிலே முடிவுறுவதைக் காணலாம்.

சாமி பெயரால் நடாத்தும் பிழைப்பு அதனால் பாதிக்கப்படும் குடும்பங்கள் பற்றியும் பின் அந்த பொய்யான மாய வலையில் இருந்து எவ்வாறு மீண்டார்கள் என்பதையும் அழகாக சிறுகதையூடாக தெளிவுப்படுத்துகின்றார் ஆசிரியர்.

**'குறிஞ்சிப்பூ'**

மலையக மக்களின் அவலம், சிறுவர் வன்முறை, பொருளாதார பின்னடைவு ,கல்வி கற்க முடியாத சூழ்நிலை என சிறுகதைகள் மூலமாக வெளிப்படுத்துகின்றார்.

மலையகத்தை பிறப்பிடமாக கொண்ட சிறுமி ஒரு நேர உணவிற்கே திண்டாடும் குடும்பத்தைச் சேர்ந்தவள் வறுமையால் பணக்கார வீட்டிற்கு வரும் சிறுமியை கொடுமைப்படுத்தியதால் அச்சிறுமியின் கையில் இருக்கும் காயத்தை இளைஞன் ஒருவன் காண்கிறான்.

நியாயத்தை நிலை நாட்ட அவன் எடுக்கும் முயற்சியின் பலனாக வீட்டு எஜமானி சிறைக்கு செல்வதும், நட்டஈடாக இரண்டு இலட்சம் வழங்கி வைப்பதும் நீதியாக நடந்து கொள்ளும் அரசாங்க அதிகாரிகள்.

சிறுமிக்கான தீர்வு கிடைத்தாலும் சமுதாயம் நல்லப்படியாக வாழவிடுமா? என்கின்ற கேள்வியுடன் விடையுமின்றி கதையை முற்றும் அடைகின்றது.

**'ஆசை அண்ணன்'**

நகைச்சுவையுடன் சுவடிய சிறுகதை. அண்ணாவிற்கு நடந்த சம்பவத்தை தம்பி அழகுற கூறுகின்றார்.

பசி வந்தால் பத்தும் பறந்து போகும் பசியால் வாடுபவர் பல சிறப்புகளை இழக்க நேரிடும்.

கண்ட இடங்களில் சாப்பிடுவது உடல் நலத்திற்கு கேடு ஆசை அண்ணாவிற்கு நடந்த துன்பத்தை தம்பி சொல்லும் கதையூடாக பொருள்பட கூறியுள்ளார் ஆசிரியர்

**'மல்லிகைப் பூவாசம்'**

இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு பொருத்தமான கதை மனைவி அதிகாரம் கணவனின் பொறுப்பு ணர்ச்சிகதைக்களம்நகைச்சுவையாக நகரும் விதம் மீண்டும் வாசிக்கத் தூண்டுகின்றது.

சமூகம் சார்ந்த பிரச்சினைகள் முற்போக்கு சிந்தனை யுடன் கதைகளின் நகர்வு சிறப்பாகவுள்ளது.

**'சிறை உடைப்பு'**

பெண் கணவனை இழந்ததும் வீட்டிற்குள் தன்னை சிறைப்படுத்துவதும், பொட்டு வைக்க தயங்குவதும் காலா காலமாக தொடர்கதையானதே நூலாசிரியர் இச் சிறுகதையில் இதுவரை நிலை கொண்டிருந்த பழைய சம்பிரதாயக்கோட்டை எண்ணப் பாட்டை தகர்த்தெறிகின்றார்.

**'எங்களில் ஒருத்தி'**

சாதிய பிரச்சினை இன்று வரை பல இடங்களில் காணலாம்.

இதற்கான முடிவு அவர் அவர்களின் எண்ணத்தினால் மட்டுமே அகற்ற முடியும்.

அக்கா சாதியத்தை நேசிப்பவராகவும்,சகோதரன் அதற்கு மாறான சிந்தனை உள்ளவனாகவும் சித்திரிக்கப்படுகின்றார்.

அக்கா யாரை சாதியம் காட்டி வெறுத்தாரோ அவர்களே கடைசியில் அவருக்கு துணையாக வருவதே சமூக மாற்றத்திற்காக குறியீடாக வித்திடுகிறார்.

**'கடவுள்'**

ஆணாதிக்கம் பற்றி பேசும் இக்கதையிலேயே எதிர்நிலையாக அன்னி யோன்னியம் மிக்க ஆண் பெண் உறவுக் குடும்பத்தையும் கொண்டு வருகிறார் ஆசிரியர்.

**'எமக்குள்ளும் சில கறுப்பு ஆடுகள்'**

அக்கா, தங்கை உறவு பாசபிணைப் பற்றதாகவும், பணமே உறவை தீர்மானிப்பதாயுள்ளது.

மூத்தவள் விட்டுக்கொடுத்தாலும் இளையவள் காழ்ப்புணர்ச்சியுடன் வித்தியாசமாக மாறுப்பட்ட குணம் கொண்டவளாய் வாழ்கின்றாள்.

விலங்குகளிடம் காட்டும் அன்பை ஏன் கூடப்பிறந்தவளிடம் காட்ட முடிவதில்லை.

இன்று உறவுகள் பிளவுப்படக் காரணம் பணம், சொத்து, தொலைபேசி என அடுக்கிக் கொண்டே போகலாம்.

**'கரண்சி லாபம்'**

வட்டிக்க கொடுக்கும் யோக மாமி நேர்மையாக வாழும் கணவர் சோமசுந்தரம் பலமுறை அவளது பண ஆசையை கைவிடும்படி கூறியும் மாற்றம் நிகழவில்லை குடும்பச் சண்டையே தொடர்கதையானது.

ஒரு கட்டத்தில் வட்டிக்குக் கொடுத்து ஏமாறும் மனைவியை ஆறுதல் படுத்தும் வீட்டுத்தலைவன் ஏமாற்றிய பெண் வட்டியும் முதலுமாய் பணத்தை தருவதாக தொலைபேசியில் வாக்குறுதி கொடுப்பதால் மீண்டும் வட்டிக்கு பணத்தை யாரிடம் இரட்டிப்பான வட்டிக்கு கொடுக்கலாம் என்பதை யோசிக்கின்றாள். இன்று எம்மத்தியில் இவ்வாறான பண ஆசைப்பிடித்த பெண்கள் வாழ்வதை காணலாம். ஏமாற்றம் அடைந்த பிறகும் மீண்டும் மீண்டும் அதே தவறை செய்கின்றார்கள்.

**'அடைய முடியாத அழைப்பு'**

திருமணத்திற்கு பிறகு பிறந்த வீட்டை மறந்து போகும் பெண் கணவருக்கு அரசாங்க தொழில், கை நிறைய சம்பளம், சொந்தவீடு என சகல சௌபாக்கியங்களுடன் நிறைவாக வாழும் மஞ்சு.

கணவனின் தொழில் இடமாற்றம் காரணமாக உதவிக்கு தனது உடன் பிறப்பை அழைத்த துணைக்கு வைத்துக் கொள்கிறாள்.

ஆனால் திமிர் , ஆணவம் அவளின் சகோதரன் வீட்டை விட்டு போகுமளவிற்கு சென்று விடுகின்றது. உதவி தேவைப்படும் போது தேடப்படும் உறவுகளை தேவை முடிந்தவுடன் தூக்கி வீசுவது என்பது கவலைக்குரிய விடயமே!

**'மழையில் ஓர் அறுவடை'**

வறியவர்களுக்கு உதவிசெய்வதை போல நடித்து இலாபம் காணும் முதலாளித்துவ வர்க்கம் இன்றைய எமது நாட்டின் நிலைமை போல்

நல்லது நடக்க போகின்றது என்கின்ற கனவில வாழும் ஏழைகள் என்றும் ஏழைகளாகவே வாழனும் என்பது எழுதப்பாத விதி.

நூலாசிரியரின் கதைகள் அத்தனையும் அமர்களமே!

இந்த சிறுகதை தொகுப்பில் தான் வாழும் பிரதேசத்தை களமாக கொண்டு கதையை நகர்த்துகின்றார்.

ஒரு புறம் பெண்கள் ஆண்களால் ஏமாற்றப்படுவதும், கொடுமைப்படுத்தப்படுவதையும் மறு புறம் பணத்திமிர் பிடித்தபெண்கள், வட்டிக்கு வாங்கும் பெண்கள், கணவனின் நிலையை உணராப் பெண்கள், குழந்தைகளை சித்திரவதை செய்யும் பெண்கள் முதலானவர்களை தனது சிறுகதைகளில் பாத்திரங்களாகப் படைத்திருப்பது குறிப்பிடதக்கது.

கதாபாத்திரங்களின் பேச்சு வழக்கை பிரதிபலிக்கின்றது.

எமது சமூகம் அனுபவித்து வருகின்ற அவலங்கள், பொருளாதார சிக்கல்கள் என யாதார்த்தமான உணர்வுகளுடன் சிறுக்கதைகள் சித்திரிப்பகளூடாகவும் வெளிக்கொணருகின்றார் நூலாசிரியர்.

சமூக அக்கறை,முற்போக்கு சிந்தனை என்பவற்றின் காரணமாக அவரது சிறுகதையில் விழிப்புணர்வினை ஏற்படுத்துகின்றன.

இறுதியாக ஒவ்வொரு சிறுகதையிலும் பிரச்சினைக்கு தீர்வுகளை



தேடுவனவாக அமைந்துள்ளது.

தற்காலத்தில் சிறுகதையில் பின்னடைவினை காணலாம். இருந்தாலும் இவ்வாறான சிறுகதைகள் ஊடாக மீண்டும் சிறுகதை வளர்ச்சினை கட்டியெழுப்பலாம்.

அனைவரையும் கவரும் விதத்தில் 'எங்களில் ஒருத்தி' அமைந்துள்ளமை சிறப்பம்சம்.

தொடர்ந்தும் ஷெல்லிதாசனின் சிறுகதை தொகுப்புகள் வெளிவர வேண்டும். மேன்மேலும் இத்துறையில் பிரகாசிக்க அனைவரதும் வாழ்த்துக்கள்.

**திருகோணமலை றொசில்டா அன்டோ**

காலைக்கதிர் Kalaikkathir

# வியக்க வைக்கும் தமிழர் அறிவியல் பல பல நூறு ஆண்டு காலமாக சில மத வணக்கங்கள்

வழக்கங்கள் தமிழர்கள் வாழ்வில் புராணங்களுடன் கலந்து இயன்ற அளவும் பொதுவாக பின்பற்றப்பட்டு வருகிறது.

அதனை மூடநம்பிக்கை என்று பலரும் பழம் வழக்கங்கள் என்று சிலரும் மரபுகள் என்று இலரும் கூறுவர். இவை அன்றைய சூழலில் மற்றவர்கள் மனதில் ஒரு பயத்தை உண்டாக்குவதற்கான ஒரு மாற்று வழியாக இருந்து இருக்கலாம். இப்பமயான பழம் வழக்கங்கள் இன்னும் தேவையா என பலர் கேள்வி கேட்கலாம். இன்றைய நவீன அறிவியல் நடைமுறையில் இவைகளின் பங்கு எப்படி இருக்கும் என்பதை நாம் கட்டாயம் அறிய வேண்டும்.

அப்பொழுதுதான் அதற்கு நம் பழக்க வழக்கங்களையும் அல்லது அதை ஓட்டிய மரபுகளையும் சரிப்படுத்தி அடுத்த தலைமுறைக்கும் நமக்கும் பெருமை சேர்க்குமாறு கொண்டு செல்ல முடயும். இது எவ்வாறாயினும் பொதுவாக தமிழர்களின் பல சடங்குகள், பழக்கவழக்கங்கள் மற்றும் மரபுகளுக்கும் பின்னால் அறிவியல் சார்ந்த அல்லது ஏதாவது பொது காரணங்கள் இருப்பகை காண்குறோம் . அதனை நீங்கள் அறியும் போது கட்டாயம் உங்களுக்கு அது வியப்பை கொடுக்கும். இப்போது இதுல விஞ்ஞான மரபுகளின் பின்புலத்தில் இருக்கும் அருமையான காரணங்களை பார்ப்போம்.

## நம்முடைய வாழ்வியலில் யாரைப் பார்த்தாலும் தமஸ்காரம்

என்று இரண்டு கைகளையும் கூப்பி வணக்கம் கூறுகிறோம். அதன் மூலமாக விரல்களின் நுனி (பிரஷர்) புள்ளியின் ஊடாக தூண்டப்பட ஆரம்பிக்கும் அதனால் நாம் சந்திக்கும் நபரை நீண்ட நாட்கள் நாம் நினைவில் வைத்துருக்க இது பெரிதும் உதவும்.

## அரசு மர வழிபாட்டு முறை



பெரும் பாலும் அரசமரம் கோவில் களிலும் ஆற்றங்கரைகளிலம் உள்ளன. அரசமரம் மூலமாக எந்த ஒரு கனி, காய், பூ என்பன இடைக்காது. ஆனா லும் நம் முன்னோர்கள்

இதனை அழிவடையாமல் இதன் அழிவை தடுக்க பாதுகாத்து வந்தனர்.

அம் மரத்தின் அடியில் தெய்வ உருவங்களை அமைத்தும் தெய்வங்களை வணங்கும் போது அரச மரத்தினையும் வளம் வருகிறார்கள். காரணம்

அரசு மரத்தின் தாமிரச்சத்தும், மின்சார சக்தியும் காற்றின் மூலமாகவும், இலையின் கூர்முனை வழியாகவும் வளம் வருவோர் உடலில் பாய்கின்றன.

பெண்களின் கர்ப்பத்திற்குண/ தடையாக இருக்கும் இருமிகளை அழிக்கின்றது மற்றும் இரவில் அதிகமான ஒட்சிசன் வாயுவை உற்பத்தி செய்கின்றது இதனால் இம்மரத்தின் அழிவை தடுக்க நம் முன்னோர்கள் வழிபாட்டு முறைகள் கொண்டு வந்துள்ளனர்.

## கோயில் மணி

ஏன் கோயில் மணியை வைத்து அதனை அடக்கும் பழக்கத்தை கொண்டு வந்தனர், என்றால் நாம் நம்முடைய கஷ்டங்கள் இர வேண்டும் என்பதற்காக ஆலயங்களுக்கு செல்வோம்.

அப்போது நம்முடைய மனம் அமைதி இல்லாமல் அலைபாய்ந்து கொண் டிருக்கும். கோயில் மணிகள் பல வகை



- ஷயனிக்கா சிறிகாந் -

யான உலோக கலவைகளால் செய்யப் பட்டது . மணி அடிப்பதனால் ஏற்படும் ஒலியானது மனிதனின் உடைய வலது , இடது மூளைகளை இணைத்து ஒரு அமைதியான மனநிலையை அடைய வைக்கின்றது .

## கிரகண பயம்

பல இந்துக் களின் வீட்டுல் கிரகணத்தின் போது வீட்டை சுற்றி வெளியே செல்ல அனுமதிப்பதில்லை . அந்த நேரத்தில் கிரகணத்தை நேரடியாக பார்க்கவும் அவர்கள் அனுமகுக்க மாட்டார்கள்.



குறிப்பாக, இந்நேரத்தில் கர்ப்பிணிப் பெண்கள் வீட்மற்குள் தான் இருக்க வேண்டும் , அப்போதுதான் அவர்கள் வயிற்றில் உள்ள குழந்தை எந்தவித குறைபாடும் இல்லாமல் பிறக்கும் . அதேபோல் கிரகணத்துள் போது உணவருந்தவோ, சமைக்கவோ கூடாது எனவும் நம்பப்படுகின்றது . இல வீடுகளில் ஒவ் வொரு உணவு பண்டத்தின் மீதும் துளசி இலை போடுவார்கள் இதனால் இந்த உணவுகள் கெட்டுப் போகாமல் இருக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை. இதில் உள்ள ஒரு பிரச்சனை என்னவென்றால் , கிரகணத்தை நேரடியாக உங்கள் கண்களால் பார்த்தால் சூரிய ஒளியின் தீவிரத்தால் உங்கள் விழித்திரை வெகுவாக பாதிக்கப்படும். ஒளி உணர் அணுக்களுக்கும், கம்பிகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதனால் சல நேரங்களில் விழித்திரை எரிச்சல் கூட உண்டாகலாம்.

மேலும் கிரகணத்தின் போது நுண்ணுயிர்கள் முனைப்புடன் செயல்பட்டு உணவுகளை பழுதடையச் செய்யும். அதனால் உணவுகளின் துளசி இலையை போடும் போது அதில் உள்ள மருத்துவ குணங்களால் உணவுகள்கெட்டுப் போகாமல் இருக்கும்.

## சூரிய வழிபாடு

இந்துக்களின் வாழ்வியலில் மிக முக்கியமான கடமையாக காணப்படுகின்றது . இவர்கள் அதிகாலைகளில் சூரிய பகவானை வழிபடும் வழக்கத்தை கொண்



டிருக்கின்றனர் .

அதிகாலையில் வெளிப்படும் சூரிய கதிர்கள் கண்களுக்கும் , உடலுக்கும் மிகவும் நல்லது அதிகாலையில் சுத்தமான காற்று கடைக்கும் . குறிப்பாக , மார்கழி , தை மாதத்தில் நல்ல தரமான பிராணவாயு இடைக்கும் . இது பூமியினுடைய சுழற்சியினால் ஏற்படும் ஒரு வகையான செயல் இதனை மக்கள் சுவாசிக்க வேண்டும் என்பதற்காகத்தான், மார்கழி மாதத்தில் கோலம் போட வைத்தார்கள். இது வாழ்வியலின் தமிழ் அறிவியலின் செல்வாக்கை காட்டுவதாக அமைகின்றது .

## குங்கும பொட்டு

உவ்வொரு பெண்களும் திருமணத்தின் பின் குங்கும பொட்டு அணிவது வாடிக்கையான ஒன்றாகும் . நெற்றியில் தான் அண்டிமனியர் சக்கரம் இருப்பதாக கூறப்படுகின்றது . அதாவது ஆறாவது சக்கரம் அதனால் நெற்றியில் பொட்டு வைக்கும் போது இந்த சக்கரம் தானாக செயல்பட தொடங்கு விடும். அதன் பின் உடலில் உள்ள ஆற்றல் திறனை இமக்க விடாமல் செய்து புத்தி கூர்மையை ஏற்படுத்துகின்றது.

அதோடு ரத்த ஓட்டத்தை சீர்படுத்துகிறது.

## பெண்கள் காலில் அணியக்கூடிய மெட்டி.



திருமணமான பெண்கள் காலின் உடைய பெருவிரல் அருகே உள்ளவிரலில் மெட்டி அணிவது வழக்கமாக இருக்கின்றது. அந்த விரலில் இருக்கக்கூடிய நரம்பு கர்ப்பப்பை மற்றும் இதயத்தோடு தொடர்புடையதாக இருப்பதால் அந்தவிரலில் மெட்டி அணிவதால் கர்ப்பப்பை வலுவடையும் இதனால் திருமணத்துற்கு பிறகு மெட்டி அணிய சொல்கின்றனர். குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

## இறந்தவீடுகளுக்கு சென்றால் குளித்தல்.

பிரேத ஆன்மாக்கள் உங்களைப் பிமத்து விடும் என்ற மூடநம்பிக்கையைத் தான் இதற்கு காரணமாக பலரும் கூறி வருகின்றனர். ஆனால் உண்மை என்னவென்றால் அது நுண்ணுயிர்கள் சம்பந்தப்பட்டவை ஆகும் . ஒருவர் இறந்த பிறகு அவர் உடல் கொஞ்சம் கொஞ்சமாக அழுகத் தொடங்கும் ஈமச்சடங்குகளில் கலந்து கொள்பவர்கள் இறந்த நபருக்கு அருகில் தான் இருக்க வேண்டி வரும் இதனால் அழுகிக் கொண்டிருக்கும் இறந்த உடலில்

இருந்து வரும் பாக்டீரியாக்களால் நீங்கள் பாதிக்கப்படலாம் அதனால் தான் ஈமச்சடங்கு முடித்த கையோடு பிற வேலைகளை செய்வதற்கு முன்குளிக்க வேண்டும்.

## வடக்கு நோக்கி தலை வைத்து படுககாதகூர்கள்.

என்று நாம் எமது அன்றாட வாழ்வியலில் கேள்விப்பட்டு அதற்கு ஏற்ப நடந்திருப்போம் .

இதற்கான அறிவியல் உண்மை என்னவென்றால் , வடக்கு தசையில் தலை வைத்து படுக்கும் போது அது வட துருவம் என்ற காரணத்தினால் உங்கள் தலை ஒரு காந்தமாக செயல்படும் தூங்கும் போது வடதிசை நோக்கி தலை இருந்தால் உடலின் வடதுருவம், பூமியின் வட துருவம் ஒன்றோடு ஒன்று தள்ளும் இதனால் உங்கள் ரத்த ஓட்டம் பாதிக்கப்படும் . இதன் காரணமாகத்தான் நாம் நம்முடைய வாழ்வியலில் வடக்கு தசை நோக்கபடுப்பது நம்முடைய வாழ்வில் பெரும்பாலும் மிக குறைவாக உள்ளது.

## பயணத்துக்கு முன் தயிரும் சர்ககரையம் உண்ணுவது.

வீட்டை விட்டு வெளியேறுவதற்கு முன் தயிரும் தேனும் கொடுப்பது, ஒரு வழக்கமாக உள்ளது. இது அதிர்ஷ்டமானது என நம்பப்படுகிறது . தயிரில் கல்சியம் மற்றும் புரதம் உள்ளது கூடவே இயற்கை



சர்க்கரையும் சிறிதளவில் உள்ளது இதனால் வயிற்றுக்கும் செரிமான அமைப்பிற்கும் நல்லதாகும் . அதனால் வெளியே செல்ல முன் இதனை உண்ணச் சொல்கிறார்கள் . இதல் குளிர்ச்ச தன்மையும் உள்ளது அதனால் அழுத்தம் நிறைந்த வேலைகளை செய்ய கிளம்புவதற்கு முன் இதனை உண்ணவைக்கின்றார்கள் .

## பாம்பை கொன்ற பிறகு அதன் கலையை நசுக்குவது.

பாம்பை கொல்ல முயற்சி செய்பவரை பாம்பு அதன் கண்களால் படிந்து வைத்துக் கொள்ளும் எனக் கூறுவார்கள் . அதனால் அதன் தலையை நசுக்க கொல்வார்கள். ஆனால் அதற்கு சொல்லப்படும் காரணம் தவறானது . பாம்பை கொன்ற பிறகும் கூட அதன் பல்லில் விஷம் இருக்கும் இதனால் அது இறந்தாலும் ஆபத்தானது அதனால் பாம்பின் தலையை நசுக்கினால் அந்த விஷம் அழிந்து விடும். துண்டக்கப்பட்ட பாம்பின் தலையை எதிர் செயலாற்றி கடிக்க செய்யலாம்.

இவ்வாறு பல பல விடயங்கள் கருத்துடன் வகுக்கப்பட்ட பின் அதன் உள்ளார்ந்த அர்த்தம் தெரியாமல் போய் விடுகின்றது. அறிவு மற்றும்தகவலின் அளவு நம் சிந்தனையை கட்டுப்படுத்துகின்றது மேலும் பல வியக்கத்தக்க விடயங்கள் தமிழர் பண்பாட்டில் காணப் படுகின்றன.

## கிராமத்து திருவிழாக்களில் மஞ்சள் நீராட்டுதல்



ஓர் அர்த்தத்தோடு வந்ததுதான் . மஞ்சள் ஓர் சிறந்த இருமி நாசினி வீட்டுத் தோட்டத்தில் நிற்கும் முருங்கைக்கரை ஆண்மையைப் பெருக்கும். கீழாநெல்லி மஞ்சள் காமாலை நோய்க்கு அருமருந்தாகும் . அந்த மருந்து ஆங்கில மருந்து விட பலனை அள்ளித்தர வல்லது. அதன் சக்தி உணர்ந்த மேல்நாட்டு விஞ்ஞானிகள் கீழாநெல்லியை மாத்திரையில் கொண்டு வந்தனர், இது தமிழர் மருத்துவத்திற்கு கிடைத்த அங்கீகாரம் மற்றும் மேலும் பல தமிழர்கள் வழக்காறுகளுக்கு பின்னால் இருக்கும் அறிவியல் பற்றி நாம் அறிவது குறைவு . திருமணமான பெண்கள் தலைக்கு பூச்சு விடுவது , யானையை பார்ப்பது அல்லது கழுதை கத்துவது நல்லது, எண்ணை மஞ்சள் குங்குமம் கொட்டுவது தயது, செவ்வாய் அல்லது மாலை நேரங்களில் முடி வெட்டுவது கெட்டது , பல்லி தலையில் விழுவது ராகு காலத்தின் போது காரியங்களை செய்வது அல்லது ஒரு அமங்கலமான நேரத்தில் பயணம் செய்வது, இடது கையால் கொடுப்பது அல்லது எடுப்பது, உடைந்த பூசணிக்காயை அல்லது தேங்காய்களை சாலையில்

தாண்ம செல்வது கெட்டது என பல விடயங்கள் நமது முன்னோர்கள் கூறி கேட்டிருப்போம் ஆனால் அதற்கு பின்னிருக்கும் அறிவியலை நாம் அறிய தவறிவிட்டொம்.

விஞ்ஞானத்தின் அணு சக்தியும் தமிழரின் அறிவியலும் ஒரே பரம் பொருளின் வெவ்வேறு தோற்றங்கள் தான். விஞ்ஞானம் வேறு தமிழர் பண்பாட்டு அறிவியல் வேறு அல்ல. விஞ்ஞானத்துக்கும் தமிழர் அறிவியலுக்கும் இடையே உண்மையான பிரிவு ஏதும் கிடையாது. பௌதிக உலகில் விஞ்ஞானம் விதி என்றால் தமிழர் உலகில் தமிழர்

அறிவியல் விதியாகும்.



காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ்ப்பாணத்து பத்திரிகை வளர்ச்சியில் அமெரிக்க மிஷனரியின் வகிபாகம்

இலங்கையில் தமிழ்மொழி பத்திரிகை வளர்ச்சி அன்னியர் ஆட்சியின் விளைவால் ஏற்படுத்தப்பட்ட விளைவாகும். உலகியலறிவு, மொழி வளர்ச்சி, வாழ்வாங்கு வாழும் வழி, நகைச்சுவை, உடை, உவகை, வீரச்செயல் போன்ற பலவகையான உள்ளச் சுவைகளும் பத்திரிகையினை வாசிப்பதால் ஏற்படுகின்றன. இவ்வாறு தோற்றம் பெற்ற பத்திரிகைகள் இன்று தொழில் ரீதியான நவீன பண்புகளுடன் காணப்படுகின்றது.

ஐரோப்பியனது வருகை யாழ்ப்பாணத்தின் அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டு வரலாற்றில் புதிய காலகட்டத்தின் தொடக்கமாக பார்க்கப்பட்டது. இலங்கைக்கு ஒல் லாந்தர் காலத்திலேயே அச்சு இயந்திரம் வந்தாயினும் அது அரசாங்க அறிவித்தல்களையும் பிரகடனங்களையும் வெளியிட்ட மட்டுமேமே பயன்படுத்தப்பட்டது. போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆட்சி காலத்தில் பல புதுமைகள் இடம்பெற்றாலும், ஆங்கிலேயர் ஆட்சி காலமே பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது. இக்காலத்தில் மதப்பணி புரிவதற்கு வருகை தந்த பல மிஷனரிகளில் ஒன்றான அமெரிக்க மிஷனரியானது பலப்பணிகளை புரிந்தனர். மதத்தை பரப்பும் நோக்கத்துக்கு அப்பால் கல்வி, அரசுப் பணி, வைத்தியம் என்பவற்றை மேற்கொண்டு யாழ்ப்பாணத்தவர் பேணி வந்த அனைத்து துறைகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினர். இவ்வகையிலே இன்று யாழ்ப்பாண மக்களிடையே பெரும் செல்வாக்கு பெற்றிருக்கும் பத்திரிகை துறையை அறிமுகப்படுத்தி அத்துறைக்கு பெரும் பங்காற்றி இருப்பவராக அமெரிக்க மிஷனரியினர் காணப்படுகின்றனர்.

ஆரம்பத்தில் புரட்டஸ்தாந்து மதத்தை பரப்பும் நோக்குடன் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த இவர்கள் கல்வி, வைத்திய பணிகளை மேற்கொள்வதற்காகவும் இலகுப்படுத்துவதற்காகவும்யாழ்ப்பாணத்துக்கு முதன்முதலில் அச்சு இயந்திரத்தை அறிமுகப்படுத்தி பதிப்பு பணியில் ஈடுப்பட்டு வந்தனர். ஆரம்பத்தில் துண்டு பிரசுரங்கள், நூல்கள் என்பவற்றை வெளியிட்டு வந்த மிஷனரி காலப்போக்கில் தமது நோக்கத்தை மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் பத்திரிகை ஒன்றை வெளியிட்டனர்.

யாழ்ப்பாணத்தை பொறுத்தவரையில் ஐரோப்பிய வருகைக்கு முன்னதான காலப்பகுதியில் கல்வெட்டுக்கள் வெளியிடுதல் முரசறைதல், ஓலைகள் பதிவு செய்தல் என்ற முறைகளையே அறிமுகப்படுத்தி இருந்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் காலத்தில் கடதாசி அறிமுகமானாலும் நிர்வாக நடவடிக்கைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதால் மக்கள் மத்தியில் பெரிதான தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. இவ்வாறான நிலையில் பிரத்தானிய ஆட்சிக் கால அமெரிக்க மிஷனரி பத்திரிக்கை வெளியிடானது தொடர்பு சாதன முறையில் பத்திரிகை துறையை அறிமுகப்படுத்தி,


THE MORNING STAR.

Vol. 62. Jaffna, Thursday 10th of April. 1902. No. 8

Righteousness Exalteth a Nation but Sin is a Reproach to any People.

யாழ்ப்பாணத்தில் பத்திரிகை கலாசாரம் ஒன்று தோற்றம் பெறவும் யாழ்ப்பாணத்தில் அறிவியல் ரீதியாக வளர்ச்சி அடையவும் செய்தது.

அமெரிக்க மிஷனரி ஆனது அமெரிக்காவின் மசாசுச்செற் மாநிலத்தில் 1810 ஆம் ஆண்டு தோற்றம் பெற்று புரட்டாஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தை கீழைத் தேசங்களில் பரப்பும் நோக்குடன் ஊழியர்கள் பலரை நியமித்து பல குழுக்களாக பயணங்களை மேற்கொண்டது. நியூஸ்வெல் தலைமையிலான அமெரிக்க மிஷனரியானது இந்தியாவை நோக்கி வந்தடைந்தனர். இந்தியாவில் பணிகளை மேற்கொள்வதற்கு அக்கால பகுதி சாதகமாக அமையாததனால், மொரிசியஸ் நோக்கி பயணத்தை மேற்கொண்டனர். இப்பயணத்தின் இடையில் ஏற்பட்ட துன்பவியல் நிகழ்வின் காரணமாக 1813 இல் இலங்கையை வந்தடைந்தனர்.

அச்சமயத்தில் இலங்கையின் தேசாதிபதியாக இருந்த ரொபர்ட் பிரவுன்ரிக் அவர்கள் அவர்களை வரவேற்று யாழ்ப்பாணத்தில் பணிகளை மேற்கொள்வதற்கு அனுமதியினை வழங்கினார். தமது பணிகளை மேலும் விஸ்தரிக்கும் முகமாக அமெரிக்காவில் உள்ள தலைமையகத்துக்கு ஆளணி உதவி கோரி வேண்டுகோள் விடுக்க, அதனை ஏற்றுக் கொண்ட மிஷனரி தலைமையகம் மற்றுமொரு மிஷனரி அணியினரை அனுப்பி வைத்தனர். அவ்வணியினர்1816 இல்யாழ்ப்பாணத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளில் குடியேறி தனது பணிகளை முன்னெடுத்தனர். 1819 ஆம் ஆண்டு இரண்டாவது அணியினர் வருகை தந்து உடுவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில் குடியேறினர். இவ்வாறு காலத்துக்கு காலம் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் பல பகுதிகளிலும் விஸ்தரித்துக் கொண்டனர். மிஷனரியினர் ஆசிரியர்களாகவும் வைத்தியர்களாகவும் அச்சு இயக்குனர்களாகவும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட அச்சகத்தின் மூலம் பதிப்பு பணியினை முன்னெடுத்து வந்தனர். மதத்தை பரப்பும் நோக்குடன் அறிமுகப்படுத்திய அச்சு இயந்திரத்தின் மூலம் ஆரம்ப காலங்களில் மத சார்பான வெளியீடுகள் வெளியிடப்பட்டு வந்தன. பின்பு நூல்கள் துண்டு பிரசுரங்கள் என்பதை வெளியிடப்பட்டன. துண்டு பிரசுரங்கள் வெளியிட்டதன் விளைவாக தமிழ் மொழியில் உறைநடை மரபொன்று தோற்றம் பெற்று வளர்ச்சி அடைந்தது. இவ்வாறு தொடர்ந்து சுதேச மக்களின் அறிவியல் வளர்ச்சியை ஊக்கப்படுத்த பத்திரிகை வெளியிடுவதற்கு நினைத்தனர். யாழ்ப்பாணத்தில் முதன்முதலாக பத்திரிகையை வெளியிட்டு இலங்கையில் பத்திரிகை துறையின் தோற்றத்திற்கு காரணமாயினர். இவ்வாறு யாழ்ப்பாணத்தில் பத்திரிகை கலாசாரம் ஒன்று தோற்றம் பெற்று வளர்ச்சியடைய தொடங்கியது.

அமெரிக்க மிஷனரியானது பத்திரிகை முயற்சியின் வெளியீடாக 1841 ஜனவரி 7 தமிழில் உதயதாரகை என்ற பெயருடன் ஆங்கிலத்தில் வஜுந ஆழசஜஷ்பௌவயச என்ற பெயருடன் முதலாவது பத்திரிகை பிரதி வெளிவந்தது. இதுவே உலகத்தில் தோன்றிய இரண்டாவது தமிழ் பத்திரிகையும் இலங்கையில் தோன்றிய முதலாவது பத்திரிகையாவும் திகழ்கின்றது. உதயதாரகை பத்திரிகை வெளியிடானது உலகத் தமிழ் பத்திரிகை வரலாற்றில் யாழ்ப்பாணத்தின் பெயரை பதிவு செய்வதற்கு காரணமாக அமைந்தது. உதய தாரகை பத்திரிகையின் வருகையானது தமிழ் பத்திரிகை துறையின் தோற்றத்துக்கு வித்திட்டதுடன் பத்திரிகைத் துறை சார் தொழில்நுட்ப விடயங்களை சுதேசிய மக்களிடையே பரப்பும் வகையில் செயல்பட்டு வந்தது. ஆரம்பத்தில் பத்திரிகை தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளை உள்ளடக்கிய வகையிலும் 8 பக்கங்களை கொண்டதாகவும் ஒவ்வொரு மாத முதலாம் மூன்றாம் வியாழக்கிழமைகளில் வெளி வந்தது. பின்னர் இது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறையும் அதன் பின் வாரம் ஒருமுறையாகவும் வெளிவர தொடங்கியது. பத்திரிகை துறை வளர்ச்சியில் மற்றுமொரு பரிணாமமாக சிறுவர்களை கவரும் நோக்குடன் அறிவியல், வாசிப்பு ஆகியவற்றை வளர்க்கும் நோக்குடனும் 1864இல் பாலிய நேசன் என்ற பத்திரிகையை வெளியிட்டனர்.

இதனால் ஏனைய கிறிஸ்தவ சபையினர் கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல்வேறு பத்திரிகைகளை வெளியிட ஆரம்பித்தனர். இவ்வாறு 1844 சைமன் காசி செட்டி என்பவர் உதயாதித்தன் எனும் பத்திரிகையை கொழும்பிலிருந்து வெளியிட தொடங்கினார். மேலும் புரட்டஸ்தாந்து மதத்தவரது மதப்பரப்புரைகளுக்கு எதிராக ரோமன் கத்தோலிக்கரால் 1845 இல் உரைகல் என்னும் பத்திரிகை வெளியிடப்பட்டது. இதனால் உதயதாரகை பத்திரிகையின் வருகையை பாதித்தது என்றாலும் தொடர்ந்து வெளிவந்த வண்ணமே இருந்தது.

பிற்பட்ட காலங்களில் 1863ல் சீ.வை கதிர்வேல் பிள்ளையால் இளங்காபிமானி என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. ரோபோர்ட் நியூட்டன் என்பவரால் 1863ல் இலங்கை காவலன் என்னும் பத்திரிகை கொழும்பிலிருந்து வெளியிடப்பட்டது. சி.முத்தையா பிள்ளை என்பவரால் 1864 கொழும்பிலிருந்து இலங்கை பாதுகாவலன் என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. அரசியல் விமர்சனம், சமூக சீர்திருத்தம், பொருளாதார விருத்தி போன்ற துறைகள் சம்பந்தப்பட்ட கட்டுரைகள் வெளியிடப்பட்டன. கிறிஸ்தவ மிஷினரிகளால் வெளியிடப்பட்டு வந்த பத்திரிகைகள் கிறிஸ்தவ பண்பாட்டை யாழ் மண்ணில் வளர்த்தெடுக்க முயற்சித்து வந்தன. இதனால் இந்து பெரியார்கள் மிஷனரினது மதப்பரப்புரைகளை தடுக்கும் நடவடிக்கையில் இறங்கி தாமே பத்திரிகைகளை வெளியிட தொடங்கினர.;


காலம் தலைகீழாய்த் தொங்குது கண்ணம்மா!

அந்த வகையில் சின்னத்தம்பி என்பவரால் 1877 முதலாவது இந்து மத சார்பான பத்திரிகையை இலங்கை நேசன் என்ற பெயருடன் வெளியிடப்பட்டது. அந்த வகையில் ஆறுமுக நாவலர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சைவ பிரகாச சமாசத்தினால் 1890ல் சைவ உதயபானு என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. மேலும் 1888ல் சைவப் பரிபாலான சபையினர் நிறுவி 1884 இல் தமிழ், ஆங்கில இரு மொழிகளில் Hindu Organ இந்து சாதனம் என்ற தமிழ் பத்திரிகையினை வெளியிட்டனர். இதனால் காலப்போக்கில் மிஷனரிகளின் மதப் பிரச்சாரம் குறைவடையத் தொடங்கியது.

அதேவேளை பத்திரிகைகள் மூலம் மதப்பரப்பும் செயற்பாட்டை அறிந்த மக்கள் அவற்றை வாங்குவதை குறைத்து வந்தனர் இதனால் காலப்போக்கில் அனைத்து பத்திரிகைகளும் அறிவியல் சமூக விடயங்களில் ஈடுபட்டு வந்தனர்.

இந்து மதத்தினர் போலவே இஸ்லாமியரும் 1873 கொழும்பிலிருந்து நெய்னா மரைக்கார் லாப்பு மரைக்கார் என்பவர்களால் புதினலங்காரி என்ற பத்திரிகை வெளியிடப்பட்டது. 1882 இல் முஸ்லிம் நேசன் வெளியிடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சைபுல் இஸ்லாம் இஸ்லாம், இஸ்லாம் மித்திரன் முஸ்லிம் பாதுகாவலன் ஆகிய பத்திரிகைகள் வெளியிடப்பட்டன. இவ்வாறு அமெரிக்க மிஷனரி ஆரம்பித்து வைத்த பத்திரிகைகள் ஏனைய கிறிஸ்தவ மிஷனரிகளிடமும் பரவியதை தொடர்ந்து பத்திரிகை கலாசாரம் தோற்றம் பெற வழி வகுத்தது. இப்பத்திகை கலாசாரம் யாழ்ப்பாணத்தினரது அறிவியல் தேடலை தூண்டியதுடன் வாசிப்பு பழக்கத்தையும் வளர்த்தது. இந்த வகையில் யாழ்ப்பாண சமூகம் வளர்ச்சி அடைவதற்கு அமெரிக்க மிஷனரியினர் அறிமுகப்படுத்திய உதயதாரகை பத்திரிகை முன்னோடியாக இருந்தது.



காலைக்கதிர் Kalaikkathir




# அருவி ஓர் பார்வை

Dream வாரியர்ஸ் பிக்சர்ஸில் எஸ் ஆர் பிரகாஷ் மற்றும் எஸ் ஆர் பிரபு தயாரிப்பில் அருண் பிரபு புருஷாத்மன் இயக்கத்தில் முற்றிலும் புது முகங்கள் நடிக்க உருவான படம் தான் அருவி. இதற்கு பிந்து மாலினி, வேதாந்த பரத்வாஜ் ஆகியோர் இசையமைத்திருக்கின்றனர்.

ஒரு பெண்ணியம் சார்ந்த படமாகவும் கொள்ளலாம். 2017 களில் வெளியான அறம் திரைப்படத்திற்கு அடுத்ததாக அதிகம் பேசப்பட்ட முழுக்க முழுக்க ஒரே ஒரு பெண் கதாபாத்திரத்தை மையமாக வைத்து வெளியான படம் தான் அருவி.

இந்தப் படம் சமூகத்தில் நடக்கும் ஒரு சில விஷயத்தையும், கிண்டல் செய்கின்ற தட்டிக் கேட்கும் வகையில் அமைந்த படமாகும். அடுத்து என்ன நடக்கும் என்ற திரில் அதிகமாக காணப்படும்

இந்த படத்தில் ஐந்து விடயம் அருமையாக காணப்படும். படத்தொகுப்பு, வசனம், நாயகி அதிதி பாலன், படத்தில் இளையோடி இருக்கும் பாசிட்டிவிட்டி என்பனவாகும்.

இத்திரைப்படமானது அருவி எனும் பிரதான பெண்கதாபாத்திரத்தை மையமாகக் கொண்டு அந்தப் பபண்ணது சிறுபராயத்திலிருந்து அவள் வளரும் வசர அவளுக்கு ஏற்படும் ஒவ்வொரு விடயத்தையும் பிரதிபலிப்பதாக காணப்படும். அந்த வகையில் பாசமான குடும்பத்தாடு இருந்த அருவி திடீரென்று அவளது தாய், தந்தை வெறுத்து ஒதுக்க நாடோடியாக அவளது வாழ்க்கை பயணிக்கிறது. இதற்கிடையில் அவளுக்கு திருநங்கையாக எமிலி எனும் ஒரு நண்பி கிடைக்கிறாள். இவர்கள் இருவரும் ரியாலிட்டி ஷோவில் கலந்து கொள்கிறார்கள். அந்த வகையில் உண்மையில் அருவி யார்? எது அவளை வீட்டை விட்டு வெளியேற்றி டிவி நிகழ்ச்சியில் பங்கு கொள்ள செய்தது? டிவி நிகழ்ச்சி சூட்டிங் செட்டில் என்ன நடந்தது? தவறு யார் மேல் என்பதையெல்லாம் அடுத்தடுத்த திருப்பங்களின் வழிய சொல்கிறது இந்த திரைக்கதை.மற்றும் ஒரு கட்டத்தில் தீவிரவாதியாக கருதப்படும் அருவி தன்னை இந்த சமூகத்திற்கும் அரசாங்கத்திற்கும் தான் தீவிரவாதி அல்ல அன்புக்கும் நல்ல அடைக்கலத்திற்கு ஏங்கும் தீவிர நோயாளி என்பதை அந்த அவல பெண் எப்படி புரியவைக்கிறாள் என்பதுதான் அருவி படத்தின் கதையும் களமும் .

சுருக்கமாக இப்படத்தின் கதை கருவை பார்த்-தாமானால் சமூகத்தினாலயும் அதன் அலட்சியத்தினாலயும் எதிர்பாராமல் எய்ட்ஸ் நாய்க்கு ஆளாகும் இளம் பெண்ணின் சமூக நிலையும் மனநிலையும இதன் கரு.

இந்தப் படத்தின் வெற்றிக்கு காரணங்கள், திருநங்கை கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதும், பாதிக்கப்பட்டவள் பெண்ணாகவே இருந்தாலும் அவள் அவ்வாறு இருக்க போய் தான் அவ்வாறு நடந்தது என திரும்பவும் அவளையே குற்றம் சாட்டுவது என புரையோடிப் போயிருக்கும் பிற்பாக்கு எண்ணங்களை சுளிர் வசனங்கள் மூலம் விமர்சனத்திற்கு உள்ளாக்கி இருக்கிறார் இயக்குனர் பிரபு. அதுவும் இடைவேளைக்கு முன் அருவி மூச்சு




விடாமல் பசும் வசனம் இந்தப் படத்தில் வெற்றிக்கு காரணமாக அமைந்தது அந்த வகையில் அந்த வசனங்கள் இயக்குனர் அருண் புருஷோத்தமனின் வரிகளாக இருந்தாலும் அதற்கு உயிர் பகாடுத்தது நாயகி அதிதி பாலன் ஆகும். இந்தப் படத்தில் நாயகி அதிதி பாலனின் நடிப்பு மிகவும் சிறப்பாகவும் யதார்த்தமாகவும் காணப்படுகின்றது.

அந்த வகையில் இந்த படமானது திருநங்கைகளையும் பாலியல் நோயாளிகசளயும் இழிவாக பார்க்கும் சிலரது எண்ணங்களை கொஞ்மைனும் மாற்றும் அளவுக்கு உள்ளது. மற்றும் நிச்சயமாக எல்லா காலத்திலும் சிறந்த தமிழ் திரைப்படங்களில் ஒன்றாகவும் அருவி இருக்கும். உண்மையான அறிவியல் நனைவது பால் சிலிர்ப்பான அனுபவத்தை தரும் ஒரு படம் மீண்டும் ஒருமுறை அமையுமா என்பது ஐயம்.

சயனிகா ஸ்ரீகாந்த்




# மன்னிப்பு என்ற பெயரில் குற்றவாளி முத்திரை குத்தி அரசியல் கைதிகளை விடுவிப்பதை ஏற்க முடியாது!

## அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவிப்பு

பொதுமன்னிப்புஎன்றபெயரில் குற்றவாளியாக முத்திரை குத்தி அரசியல் கைதிகளை விடுதலை செய்வதை ஏற்க முடியாது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கானதேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் நேற்று (சனிக்கிழமை) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு -

பயங்கரவாதத் தடை சட்டத்தால் 15 வருடம் வாழ்வைத் தொலைத்துவிட்ட அரசியல் கைதியான கிளிநொச்சியை சேர்ந்த விவேகானந்தனூர் சதீஷ்குமார் வெளியுலகையும் குடும்பத்தையும் காணும் வாய்ப்பை பெற்றுள்ளார்.

சிறையில் வாடும் ஏனைய அரசியல் கைதிகளும் துரிதமாக விடுதலை செய்யப்பட வேண்டும் எந்த வடிவத்திலும் பயங்கரவாதத் தடைச்சட்டம் இனிமேலும் தொடர்வதற்கு தெற்கின் சமூகம் இடமளிக்கக்கூடாது; அதற்கான அழுத்தத்தை தொடர்ந்து கொடுக்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.

சதீஷ்குமார் மற்றும் அவரது குடும்பத்தாருடைய தனிப்பட்ட மகிழ்வில் நாமும் பங்கு கொள்கின்றோம். ஆனால், பொது மன்னிப்பு என்ற பெயரில் குற்றவாளியாக முத்திரை குத்தப்பட்டு அரசியல் கைதிகளை - விடுதலை - என வெளியில் அனுப்புவதை, அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு என்றுமே ஏற்றுக்கொள்வதில்லை.

அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி மன்னிப்பு என்பது அரசு பயங்கரவாதத்தை அங்கீகரிக்கும், அதற்குஎதிரானமக்களின்விடுதலை



செயற்பாட்டைத் தொடர்ந்து பயங்கரவாதமாக்குவதுமானசெயலாகும். தற்போதைய ஜனாதிபதியின் அரசியல் கைதியான சதீஷ்குமாரின் விடயத்திலும் அதுவே மீண்டும்உறுதிசெய்யப்பட்டுள்ளது.

அரசியல் கைதிகள் என்போர் தேசத் துரோகிகள் அல்லர்ஃ பயங்கரவாதிகளும் அல்லர். அவர்களை குற்றவாளிகளாக அடையாளப்படுத்தி காலத்துக்கு காலம் ஜனாதிபதிகள் விடுதலை எனவெளியில்அனுப்புவதுஎன்பது தமிழ் மக்களையும், தமிழர்களின் அரசியல் போராட்டத்தையும் கொச்சைப்படுத்தி அவமதிக்கும் செயலாகும்.

தற்போதைய ஜனாதிபதி 75 ஆவது சுதந்திர தினத்துக்கு முன்னர் இனப் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என்று நாடாளுமன்றத்தில் கொக்கரித்தார்.

தமிழ் மக்கள் விரும்பாத 13 ஆம் யாப்பு திருத்தத்தை அமுல்படுத்தப்போவதாக அரசியல் நாடகம் ஆடினார்.

அது பயங்கரவாதமாகும். அரசியல் யாப்பில் உள்ள 13 ஆம் யாப்பு திருத்தத்தை அமுல்படுத்த வேண்டாம் என்று கூறி பெருமளவான இயக்கத்தினர் வீதி போராட்டத்தைநடத்தினர். பயங்கரவாத தடைச்சட்டம் இவர்களுக்கு எதிராகப் பாயவில்லை. இவர்களா தேசப் பற்றாளர்கள்?

விடுதலை செயற்பாட்டை பயங்கரவாதமாக்கி, அதற்குத் துணையாகபயங்கரவாதத்தடைச் சட்டத்தை கொண்டுவந்து 44 ஆண்டு காலமாகப் பாதுகாப்பதும், 75 ஆவது சுதந்திர ஆண்டிலும் அதன் பாதுகாப்பிலே ஆட்சி செய்ய நினைப்பதும்,அந்தச்சட்டத்தைபுதுப் பெயரில் தொடர வழிசமைப்பதும் பயங்கரவாதமாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தொடர்ந்து சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளையும் அதே சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தூக்குத் தண்டனையை அனுபவித்துக்கொண்டிருக்கும் மூன்று அரசியல் கைதிகளையும் அரசியல் தீர்மானம் எடுத்து நிபந்தனையின்றி விடுதலை செய்வதற்கான ஆக்கபூர்வ நடவடிக்கை எடுப்பதே தமிழர்களின் அரசியல் தீர்வுக்கான ஆரம்ப செயற்பாடு என்பதை மீண்டும் வலியுறுத்துகின்றோம்.

அன்று குட்டிமணி கூறியது போன்று தற்போது அரசு பயங்கரவாதம் வேறு வடிவத்தில் தெற்கு பக்கம் திரும்பியுள்ளது. இதற்கு எதிரான தெற்கின் சக்திகள் தமிழ் மக்களுடைய அரசியலை அங்கீகரித்து அதனை ஏற்றுக்கொள்வதன் மூலம் பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிரான செயற்பாட்டை இன்னும் தீவிரப்படுத்த முடியும். இல்லையேல், நாடு தொடர்ந்து பிளவுபட்டேஇருக்கும்என்பதையும் தெற்கின் சக்திகள் உணர வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 05

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 04 சனிக்கிழமை 18.03.2023 கதிர் 01

4 ஆம் ஆண்டில் காலைக் கதிரின் மாலைப்பதிப்பு

வாசகர்கள், அன்பர்கள், நலன்விரும்பிகள், விளம்பர அனுசரணையாளர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியும் வாழ்த்துக்களும்.

# இனப்படுகொலையாளி சவேந்திரவே வெளியேறு

## நாவற்குழி விகாரை முன் இன்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்







(ந.லோகதயாளன்)

முப்படைகளின் பிரதானி சவேந்திர சில்வா இன்று நாவற்குழியில் உள்ள விகாரைக்கு வருகை தந்தார். அவரது வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். போர்க் குற்றவாளி, இனப்படுகொலையாளி சவேந்திர சில்வாவே வெளியேறு என்று எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியபடி வீதியோரமாகக் கூடிய முன்னணி உறுப்பினர்கள் பலர் இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

2

## பௌத்த மயமாக்கலை உடன் தடுத்துநிறுத்துக

### ஜனாதிபதிக்கு சிறிதரன் எம்.பி. அவசர கடிதம்

நெடுந்தீவு - வெடியரசன் ஆலயம் பௌத்தமயமாக் கப்படுவதைத் தடுத்து நிறுத் துமாறு கோரி, தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் சிவ ஞானம் சிறிதரன், ஜனாதி பதிரணில்விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தொல்பொருள் என்ற போர்வையில் வடக்கு, கிழக்கில் பல்வேறு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் இடம் பெறுவதாக குறித்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் தொல்பொருள்

2

## நிதி அமைச்சின் செயலருக்கு எதிராக சஜித் அணி மீண்டும் சட்ட நடவடிக்கை

உள்ளூராட்சிசபைத்தேர் தலுக்கு நிதி வழங்கப்படாமை தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளருக்கு எதிராக மீண்டும்சட்டநடவடிக்கைஎடுக் கப்படவுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

நிதியை வழங்குமாறு உயர்நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டுள்ள போதிலும் நிதி அமைச்சின் செயலாளர் அதனைச் செயற்படுத் தவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர்

2

## பெருந்தொகைப் பணம், போதைப் பொருளுடன் கொழும்பில் லொறிச் சாரதி வெள்ளியன்று கைது

ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் பெருந் தொகைப் பணத்துடன் கொழும்பு, கோட்டையில் வெள்ளிக்கிழமை லொறிச் சாரதி ஒருவர்

2

## மூன்றாம் தவணை விடுமுறை ஏப். 5

நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளுக்கும் மூன்றாம் தவணை விடுமுறை ஏப்ரல் 5ஆம் திகதி வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

புதிய ஆண்டுக்கான முதலாம் தவணை ஏப்ரல் 17ஆம் திகதி மீண்டும் பாடசாலைகள் தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மூன்று பெண்களைக் கொன்று நகைகளைக் கொள்ளையடித்த சீரியல் கில்லர் கைது

மூன்று பெண்கள் கழுத்துநெரித்துப்படுகொலை செய்யப்பட்டு, அவர்களின் உடைமைகள் கொள்ளையடித்த சம்பவத்துடன் தொடர்புடைய சீரியல் கில்லர் ஒருவரைத் தாம் கைதுசெய்திருப்பதாகப் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

யகிரல பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய சந்தேகநபர் எல்பிட்டியவில் வைத்து கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி இத்தேபனையில்

2

## புதிய பொலிஸ்மா அதிபர் தெரிவு: கூடுகின்றது அரசமைப்பு பேரவை

புதிய பொலிஸ்மா அதிபரைத் தெரிவு செய்வதற்காக எதிர்வரும் வாரமளவில் அரசமைப்பு பேரவை கூடவுள்ளது. புதிய பொலிஸ்மா அதிபரைத் தெரிவு செய்வதற்கான பரிந்துரைகள் இதன்போது ஆராயப்படவுள்ளன.

இதையடுத்து, அரசமைப்பு பேரவையால் புதிய பொலிஸ்மா அதிபர் தெரிவு செய்யப்படவுள்ளார்.

தற்போதைய பொலிஸ்மா அதிபரான சந்தன விக்கிரமரத்னவின் பதவிக் காலம் எதிர்வரும் 23ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

புதிய பொலிஸ்மா அதிபர் பதவிக்குப் பொலிஸ் திணைக்களத்தின் சிரேஷ்டத்துவத்தை ஆராயும் போது, முன்னிலையில் சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர்களான நிலந்த ஜயவர்த்தன, லலித் பத்திநாயக்க மற்றும் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.



## இலங்கைக்கு முழு ஆதரவு தாருங்கள்!

### டில்லியிடம் இ.தொ.கா. கோரிக்கை

ஜோர்தானுக்கான இந்தியாவின் முன்னாள் தூதுவர் மாரிமுத்து, இந்தியாவின் இராஜதந்திரி ஸ்ரீ.கோபாலசாமி பார்த்தசாரதி மற்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான் ஆகியோருக்கிடையில் முக்கிய சந்திப்பு இடம்பெற்றது.

2

## உண்மையான நண்பர்களை இலங்கை கூடவே வைத்திருப்பது முக்கியமானது

### இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு

இலங்கை நெருக்கடியான தருணங்களிலும் உண்மையான நண்பர்களைக் கூடவே வைத்திருப்பது முக்கியமானது என்று தெரிவித்திருக்கிறார் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்.

புதுடில்லியில் இலங்கையின் வரைபடக் கலைஞர் (ஆர்க்கிடெக்) ஜியோபிறி பாவாவின் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். நெருக்கடியான தருணங்களில் இலங்கைக்கு இந்தியா உதவுவது ஒன்றும் புதினமான விடயம் இல்லை என்று அவர் தெரிவித்தார்.

அதற்கு "குருதி தண்ணீரைவிடக் கனதியானது" என்று பொருள்படும் "பிளட் இஸ் திக்கர்தான் எ வோட்டர்" என்கிற சொற்றொடரை அவர் பயன்படுத்தினார். அதாவது சாதாரண நட்பைவிட உறவு கனதியானது என்று பொருள்படும் விதத்தில் அவர் அதனைப் பயன்படுத்தினார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஜெய்சங்கர் தெரிவித்ததாவது:

இலங்கைக்கு உதவி செய்வதற்கு முன்வருவது மிக இயல்பானது. குருதி தண்ணீரைவிடக் கனதியானது. அதுவும் நெருக்கடியான தருணங்களில் அது இயற்கையானது.

இந்தச் சவாலில் இருந்தது நீங்கள் (இலங்கை) மீண்டு வந்துவிடுவீர்கள் என்று நான் எப்போதும் நம்பினேன். ஆனால், உண்மையான நண்பர்களை உங்களோடு கூடவே வைத்திருப்பது மிக முக்கியமானது.

மக்களிடையே பரிமாறிக் கொள்ளப்படக்கூடிய ஒரு வெளிப்பாடு பண்பாடு. இன்று நாம் அப்படிப் பலவற்றைப் பகிர்ந்துகொள்கின்றோம். இலங்கை எமது வரலாற்றில் பெரும்பாலான பக்கங்களைப் பகிர்ந்துகொண்டிருக்கிறது - என்றார் அவர்.

## சீரியல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெண்ணொருவர்கழுத்துநெரித்துப்படுகொலை செய்யப்பட்டிருந் தார். அவரது உடமைகள் கொள்ளையிடப்பட்டிருந்தன. அதேபோன்று கடந்தமாதம்எல்பிட்டியவில்இரண்டுபெண்கள் கழுத்து நெரித்துக்கொலைசெய்யப்பட்டிருந் தனர். அவர்களது உடமைக ளும் கொள்ளையடிக் கப்பட்டிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக எல்பிட்டிய குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசார ணைகளை நடத்தி வந்தனர்.

விசாரணைகளின் அடிப் படையில் சந்தேகநபரைக் கைது செய்து அவரிடம் இருந்து தங்க நெக்லஸ், 3 ஜோடி காதணிகள் மற்றும் தொலைபேசி போன்ற கொள்ளையிடப்பட்ட நகைக ளையும் தாம் மீட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கைக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோபாலசாமி பார்த்தசாரதியின் அழைப்பின் பேரில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை மேலும் பலப்படுத்துவது தொடர்பில் இந்தக் கலந்துரையாடலில் அவதானம் செலுத்தப்பட்டது.

அத்துடன் எதிர்காலத்தில் இலங்கைக்கு இந்தியா முழு ஆதரவை வழங்க வேண்டும் எனவும் இதன் போது இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் வலியுறுத்தினார்.

## இனப்படுகொலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாவற்குழியில் அமைந்துள்ள விகாரையின் ஒரு வழிபாட்டிடத்திற்கு கலசம் வைக்கும் நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு இடம்பெற்றது. இதில் முப்படைகளின் பிரதானி சவேந்திர சில்வா கலந்துகொண்டு கலசத்தை வைத்தார். இந்த நிகழ்வுக்கு அவர் வருவதற்கு முன்பாக விகாரை அமைந்துள்ள பகுதியில் நாவற்குழி, கேரதீவு வீதியோரம் கூடிய முன்னணியினர் பதாகைகளுடன் சவேந்திர சில்வாவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இவ் ஆர்ப்பாட்டத்தில் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

நாவற்குழு விகாரை சிங்கள பௌத்த ஆக்கிரப்பின் அடையாளம், சவேந்திர சில்வா போர் குற்றவாளி, இனப்படுகொலை குற்றவாளி சவேந்திர சில்வாவே வெளியேறு, தமிழ் இனப் படுகொலையாளி சவேந்திர சில்வாவே வெளியேறு போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை அவர்கள் தாங்கி நின்றனர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோதே அந்தப் பாதையைத் தவிர்த்து வேறு வழியாக விகாரைக்கு வந்த மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா முறைப்படி சமய நிகழ்வுகளில் கலந்துகொண்டு கலசத்தை உரிய இடத்தில் வைத்தார்.

நிகழ்வு முடிந்ததும் நீண்டநேரம் அங்கு தரித்து நிற்காமல் அவர் வெளியேறினார். இந்த நிகழ்வுக்காக தெற்கில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட பிக்குகளும் நூற்றுக்கணக்கான பக்தர்களும் அழைத்து வரப்பட்டிருந்தனர்.

## பௌத்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடங்களில் பௌத்த அடையாளங்களான விகாரைகளையும், புத்தர் சிலைகளையும், அமைக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

வெடுக்குநாறி மலை, குருந்தூர் மலை, நிலாவரை, நாவற்குழி, மயிலிட்டி, மண்ணித்தலை, உருத்திரப்புரம், கச்சதீவு, கன்னியா வெந்நீரூற்று என பல இடங்களில் முன்னெடுக்கப்பட்ட பௌத்தமயமாக்கல் செயற்பாடு தற்போது நெடுந்தீவின் வெடியரசன் கோட்டை வரை வந்துள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## நிதி அமைச்சி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

2023 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை வழங்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதேநேரம், தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தலை அறிவித்தவுடன் சகல அரச நிறுவனங்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என அரசமைப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது எனவும் லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி. சுட்டிக்காட்டினார்.

## பெருந்தொகைப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கைது செய்யப்பட்டார். காலி முகத்திடல் பகுதியில் போக்குவரத்துக் கடமையில் இருந்த பொலிஸ் அலுவலர் வழக்கமான சோதனை நடவடிக்கையில்

இருந்தபோது லொறி ஒன்றின் சாரதி இருக்கைக்குக்கீழே மறைத்து வைக்கப்பட்டிருந்த 69 லட்சம் ரூபா பணத்தையும் ஹெரோயின் போதைப்பொருளையும் கைப்பற்றினார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டதும் சந்தேகநபர் வேறு இருவருக்கு அழைப்பெடுத்து அவர்களை பொலிஸாருடன் பேசச் செய்துள்ளார். அவர்களும் 5 லட்சம் ரூபாய் கொடுப்பதாகவும் லொறியையும் சாரதியையும் பொருள் மற்றும் பணத்துடன் விட்டுவிடுமாறும் கேட்டுள்ளனர்.

சந்தேகநபரிடமிருந்து 3 கிராம் 340 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள் மற்றும் கையடக்கத்தொலை பேசியும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 29 வயதுடைய ரெககல்பொட, களுத்தறை பிரதேசத்தைச் சேர்ந்தவர். அவர் லொகன் வத்த, அஹுங்கல்ல பிரதேசத்தில் தற்காலிகமாக வசித்து வருகிறார் எனவும் பொலி–ஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

# வாழ்க்கை செலவுகளை தனியார் துறையால் சமாளிக்க முடியுமாயின் அரச சேவையாளர்களால் ஏன் முடியாது?

**றொஷான் ரணசிங்க கேள்வி**



உயர்வடைந்துள்ள வாழ்க்கை செலவுகளை தனியார் சேவை துறையினரால் சமாளிக்க முடியுமாயின், அரச சேவையாளர்களால் ஏன் சமாளிக்க முடியாது.

குறுகிய அரசியல் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு அரச தொழிற்துறையினர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள் என இளைஞர் விவகாரம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் றொஷான் ரணசிங்க தெரிவித்தார்.

மஹறகம பகுதியில் இடம் பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில்மேற் கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட் டவை வருமாறு –

வாழ்க்கைச் செலவு அதிகம், வரி அதிகம் என அரச சேவையாளர்கள் தொழிற்சங்க போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

நாட்டில் அரச சேவையை காட்டிலும், தனியார் துறையில் அதிகளவானோர் தொழில் புரிகிறார்கள். குறைவான சம்பளம் பெறுகிறார்கள், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்கு பெரும் பங்களிப்பு வகிக்கிறார்கள்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியால் தனியார் சேவைத்துறையினர் பாதிக்கப்பட்டுள்ளார்கள். தனியார் சேவை துறையினருக்கு அரசாங்கத்தை எதிர்பார்த்து இருப்பதில்லை.

ஆகவே வாழ்க்கைச் செலவுகளை தனியார் துறையினரால் சமாளிக்கமுடியுமாயின்ஏன்அரச சேவையாளர்களால் முடியாது. பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்கத்தினரில் பெரும்பாலானோர் வரி விதிப்புக்குள் உள்வாங்கப்படவில்லை.

மாதம் பல லட்சக்கணக்கில் சம்பளம் பெறுபவர்களால் 5 ஆயிரம் ரூபாவுக்கும் குறைவான வரியை ஏன் செலுத்த முடியாது. அரசியல் கட்சிகளின் ஆலோசனைகளுக்கு அமையவே தொழிற்சங்கத்தினர் போராட்டத்தில் ஈடுபடுகிறார்கள்.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கொவிட் பெருந்தொற்று காலத்தில் அரச சேவை–யாளர்களின் கொடுப்பனவுகள் மட்டுப்படுத்தப்படவில்லை.

தற்போதைய நெருக்கடியான நிலையில் இருந்து மீள்வதற்கு அரச சேவையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். – என்றார்.

# பல்கலை செல்ல முடியாத மாணவர்களுக்கு உயர் கல்வியை தொடர வட்டியில்லா கடன்

**ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவிப்பு**



கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் சித்திபெற்று அரச பல்கலைக்கழகங்களுக்கு செல்ல முடியாத மாணவர்களுக்கு உயர் கல்வியைத் தொடர்வதற்காக 8 லட்சம் ரூபா கடன் வழங்கும் திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக அந்த மாணவர்களின் அன்றாட செலவுகளுக்காக மேலும் 3 லட்சம் ரூபா கடன் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விரு கடன்களும் வட்டியின்றி வழங்கப்படவுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டி தெரிவித்துள்ளார்.

நாட்டின் வட்டி வீதம் 25 சதவீதத்துக்கும் அதிகமாக உயர்வடைந்துள்ளமையால் அதன் நன்மையை மாணவர்களுக்கும் வழங்கும் பொருட்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய 5000 ஆயிரம் மாணவர்களுக்கு இந்தக் கடனுதவி வழங்கப்படவுள்ளது.

அத்தோடு இதுவரை இலங்கை வங்கியில் மாத்திரம் வழங்கப்பட்ட இந்தக் கடனுதவியை, இனிவரும் காலங்களில் மக்கள் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி என்பவற்றின் ஊடாகவும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் இந்தக் கடன், புள்ளிகள் மற்றும் தொடரவுள்ள உயர் கல்வியின் முக்கியத்துவம் என்பவற்றின் அடிப்படையிலேயே வழங்கப்படும்.

மேலும் இந்தக் கடன், உயர் கல்வியை நிறைவு செய்து பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறி ஓராண்டு காலம் வரை வழங்கப்படும் என்பதோடு, தொழில் கிடைக்கப்பெற்றதன் பின்னர் அதனை மீள செலுத்துவதற்கான வாய்ப்பும் வழங்கப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டி மேலும் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# நட்டமடையும் நிறுவனங்களை மறுசீரமைப்பில் தவறென்ன?

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெகான் கேள்வி

நட்டமடையும் 52 அரச நிறுவனங்கள் கடந்த ஆண்டு மாத்திரம் 80 கோடி ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளன. ஒட்டுமொத்த மக்களுக்கும் சுமையாக உள்ள நட்டமடையும் அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதில் தவறென்ன உள்ளது.

நடைமுறைக்குத் தேவையான தீர்மானங்களைத் தற்போது எடுக்காவிட்டால் நாட்டுக்கு எதிர்காலம் என்பதொன்று கிடையாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஒத்துழைப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டதன் பின்னரே பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதைத் துரிதப்படுத்த வேண்டும். நாணய நிதியத்தின் பணிக்குழாம் மட்ட இணக்கப்பாடு கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் எடுக்கப்பட்டது.

சர்வதேச பணிக்குழாம் நிபந்தனைகளுக்கு அமைய கடன் மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும் அரச வருமானம் மற்றும் அரச செலவு ஆகியவற்றுக்கு இடையிலான பற்றாக்குறையை முகாமைத்துவம் செய்வது பிரதான பிரச்சினையாக இருந்தது. மறுபுறம் வங்குரோத்து நிலை என்று உத்தியோகபூர்வமாக அறிவித்திருந்தோம்.

இவ்விரு காரணிகளால் தான் நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்குத் தாமதமானது.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் 33 கோடி டொலர் இந்த மாதத்திற்குள் கிடைக்கப் பெறும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்களை எதிர்வரும் ஆண்டு ஆட்சிக்கு வரும் புதிய அரசாங்கம் மாற்றியமைத்ததால் மீண்டும் பாரிய பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும். ஆகவே நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நான்கு ஆண்டு காலத்துக்கு மட்டுப்படுத்த முடியாது.

நட்டமடையும் அரச நிறுவனங்களால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஸ்ரீலங்கன் விமான சேவையை நிச்சயம் மறுசீரமைக்க வேண்டும்.

வாழ்க்கையில் ஒருமுறை ஊடாக விமானத்தில் பயணம் செய்யாதவர்கள் கூட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவை நிறுவன நட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

நட்டமடையும் 52 அரச நிறுவனங்கள் கடந்த ஆண்டு மாத்திரம் 800 பில்லியன ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளன. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் ஆகிய மூன்று பிரதான நிறுவனங்களின் நட்டம் 95 சதவீதமாகக் காணப்படுகிறது.

இந்த நிறுவனங்களை மறுசீரமைப்பதில் தவறென்ன உள்ளது. நடைமுறைக்குச் சாத்தியமான தீர்மானங்களைத் தற்போது எடுக்காவிடின் நாட்டுக்கு எதிர்காலம் என்பதொன்று கிடையாது.

அரச நிறுவனம் தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள சுயமாக நிதி திரட்டிக் கொள்ள வேண்டும் என சர்வதேச நாணயம் குறிப்பிடுவதில் தவறேதும் இல்லை. இந்த நிபந்தனை இலங்கைக்கு மாத்திரமல்ல, ஏனைய நாடுகளுக்கும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிதி விவகாரத்தில் வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுவது அரசாங்கத்தின் பொறுப்பு. இதுவரை காலமும் நிதி விவகாரம் முறையற்ற வகையில் முன்னெடுக்கப்பட்ட காரணத்தால்தான் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது, ஆகவே, வெகுவிரைவில் ஊழல் ஒழிப்பு சட்டம் இயற்றப்படும்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார மீட்சிக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். –என்றார்.

# திட்டமிட்ட இன அழிப்பில் இருந்தது தமிழர்களை பாதுகாக்க வாருங்கள்

## பிரான்ஸ் தமிழர் கலாசார அமைப்பு அறைகூவல்

மிகையான இராணுவ மயமாக்கலின் மூலம் தமிழர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுவரும் திட்டமிடப்பட்டவாறான இனவழிப்பில் இருந்து தமிழீழத்தைப் பாதுகாப்பதற்கு முன்வருமாறு பிரான்ஸ் தமிழர் கலாசார அமைப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடம் கோரிக்கைவிடுத்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 52 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக பிரான்ஸ் தமிழர் கலாசார அமைப்பின் சார்பில் உரையாற்றிய நிரந்தி பீரிஸ் இதுபற்றி மேலும் கூறியவை வருமாறு –

தமிழீழ மக்கள் அதிகரித்துவரும் இராணுவமயமாக்கத்தால் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த இருவருடகாலமாக வட மாகாணத்தின் தனியொரு மாவட்டத்தில் 20 இற்கும் மேற்பட்ட சோதனைச்சாவடிகள் இயங்கிவருகின்றன. இந்தச் சோதனைச் சாவடிகள் தமிழ்மக்களைத் தொடர்ந்து இராணுவ ஒடுக்குமுறையின் கீழ் வைத்திருப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுவருகின்றன. அந்த சோதனைச் சாவடிகளில் தமிழ்மக்கள் பெருமளவிற்குப் பக்கச்சார்பான முறையில் நடத்தப்படுகின்றார்கள்.

திட்டமிட்டவகையிலான இராணுவ மயமாக்கலுக்குத் தமிழீழம் முகங்கொடுத்து– வருகின்றது. 400 ஏக்கர் நிலப்பரப்பில் நிறுவப்பட்டிருந்த குறித்தவொரு இராணுவ முகாம், அண்மையகாலத்தில் 3 ஆயிரம் ஏக்கருக்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றது.

இராணுவ முகாம் விஸ்தரிப்புக்காக 434 தமிழ் குடும்பங்களுக்குச் சொந்தமான வாழ்வாதார மற்றும் விவசாயக்காணிகள் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன.

போரின் பின்னர் முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த தமிழ்மக்களின் காணிகள் மகாவலி அதிகாரசபை மற்றும் வனப்பாதுகாப்புத்திணைக்களம் ஆகியவற்றால் கூட்டாகக் கையகப்படுத்தப்பட்டு, சிங்களமக்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதிலடங்கும் 8 கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த மக்களனைவரும் மகாவலி அதிகாரசபையின்கீழ் செல்வதை விரும்பவில்லை. எனவே திட்டமிடப்பட்டவாறான தமிழர் இனவழிப்பில் இருந்து தமிழீழத்தைப் பாதுகாப்பதற்கு இந்தப் பேரவை உறுப்பினர்கள் முன்வரவேண்டும்.

அதேபோன்று போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை என்பன தொடர்பில் நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டிருப்போருக்கு எதிராக அமெரிக்கா மற்றும் கனேடிய அரசாங்கங்கள் விதித்ததைப்போன்ற தடைகளை விதிக்குமாறு இந்தப் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுக்கின்றோம். மேலும் இலங்கைக்கென விசேட அறிக்கையாளரொருவரை நியமிக்குமாறும், இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்துமாறும் பேரவையின் உறுப்பினர்களிடம் வலியுறுத்துகின்றோம் என்று தெரிவித்தார்.

# தேர்தல் குறித்த பிரச்சினைகளுக்கு தீர்வுகாண நீதிமன்றை நாடுவோம்!

## சாகர காரியவசமும் போர்க்கொடி




மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் உள்ளூராட்சி மன்றங்கள் இயங்குவது ஜனநாயகத்துக்கு முரணானது. தேர்தல் தொடர்பில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்வுகாண நீதிமன்றத்தை நாடத் தீர்மானித்துள்ளோம் என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் உள்ள பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற பேச்சின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மற்றும் பதவி காலம் நிறைவு பெறும் உள்ளூராட்சி மன்றங்களின் நிலைமை தொடர்பாக விசேட பேச்சில் ஈடுபட்டோம்.

உள்ளூராட்சி மன்ற நிர்வாகம் மக்கள் பிரதிநிதிகள் அல்லாத தரப்பினரால் முன்னெடுக்கப்படுகின்றமை ஜனநாயகத்துக்கு முரணானது என உயர்நீதிமன்றம் கடந்த காலங்களில் தீர்ப்பளித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு உறுதியான தீர்வைப் பெற்றுக்கொள்ள நீதிமன்றத்தை நாட தீர்மானித்துள்ளோம்.

பொதுஜன பெரமுனவின் ஆலோசனைக்கு அமைய உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்படுவதாக எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டு அடிப்படையற்றது.

தேர்தலை பிற்போடும் செயற்பாடுகளுக்கு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்கவில்லை. மாகாண சபைத் தேர்தல் எப்போது நடக்கும் என்ற நிச்சயமற்ற தன்மையை உருவாக்கியவர்கள் தான் தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல், மக்களின் ஜனநாயக உரிமை தொடர்பில் கருத்துரைக்கிறார்கள்.

கட்சி என்ற ரீதியில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அல்ல எந்த தேர்தலையும் எதிர்கொள்ளத் தயாராக உள்ளோம். தேர்தலை நடத்துவது தொடர்பாக ஆணைக்குழு வெளியிட்ட தீர்மானங்களால் முரண்பாடுகள் தோற் றம் பெற்றுள்ளமையை அவதானிக்க முடிகிறது.

சகல தரப்பினருடன் கலந்தாலோசித்து ஒரு தீர்க்கமான தீர்மானத்தை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிக்க வேண்டும்.

சகல கட்சி செயலாளர்களுடன் எதிர்வரும் 23 ஆம் திகதி பேச்சில் ஈடுபட தேர்தல்கள் ஆணைக்குழு அழைப்பு விடுத்துள்ளது. அன்றைய தினம் இடம்பெறும் பேச்சைத் தொடர்ந்து தேர்தல் தொடர்பாக ஒரு தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்பார்க்கிறோம். – என்றார்.



# தேர்தல் தொடர்பாக தன்னிச்சையாக எடுத்த தீர்மானங்கள் துறைசார் மட்டத்தில் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளன!

## ஜனக வகும்பர கூறுகிறார்

தேர்தல் நடவடிக்கைகள் துறைசார் மட்டத்தில் முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் முதலில் அனைவரும் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும், என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் இராஜாங்க அமைச்சர் ஜனக வகும்பர தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு தலையிடவில்லை.

தேர்தல் தொடர்பான தீர்மானங்களை எடுக்க முன்னர் தேர்தல்கள் ஆணைக்குழு துறைசார் தரப்பினருடன் பேச்சுகளை மேற்கொள்ள வேண்டும், ஆனால் அவ்வாறு பேச்சுகள் ஏதும் முன்னெடுக்கப்படவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு, பெற்றோலிய கூட்டுத்தாபனம் உள்ளிட்ட தரப்பினருடன் தேர்தல்கள் ஆணைக்குழு பேச்சுகளை மேற்கொள்ளவில்லை. தன்னிச்சையான முறையில் எடுத்த தீர்மானங்கள் இன்று துறைசார் மட்டத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவித்துள்ளன.

தேர்தல் நடவடிக்கைகளுக்கும், வேட்பாளர்களுக்கும் தேவையான எரிபொருளை வழங்க முடியாது என வலுசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. தேர்தல் திகதி அறிவிப்பை விடுக்க முன்னர் ஆணைக்குழு பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் பேச்சுகளை மேற்கொண்டிருந்தால் முரண்பாடுகள் தோற்றம் பெற்றிருக்கா.

தேர்தல் தொடர்பில் முதலில் சகல தரப்பினரும் பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும், ஆகவே தேர்தல் தொடர்பில் ஆணைக்குழு அறிவித்த தீர்மானம் மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்பு இருந்தால் மாத்திரமே தேர்தலை நடத்த முடியும்.

காலி மாவட்டம் எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத்தை தவிர ஏனைய உள்ளூராட்சி மன்றங்களின் பதவி காலம் நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவு பெறும்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் மாநகர ஆணையாளர்கள் மற்றும் பிரதேச சபை செயலாளர்களிடம் பொறுப்பாக்கப்படும்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறு சகல மாகாண ஆளுநர்களுக்கும் விசேட பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சிமன்றங்களால் [illegible] பணிகள் மாத்திரம் முன்னெடுக்கப்படும், நிர்வாகக்கட்டமைப்பில் எவ்வித முரண்பாடுகளும் தோற்றம் பெறா. – என்றார்.

# போதைப்பொருள் தொடர்பில் பொலிஸாருக்கு எதிராக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டில் உண்மைகள் உள்ளன!

## ஒப்புக்கொள்கிறார் நீதி அமைச்சர் விஜயதாஸ

போதைப்பொருள் அல்லாத வேறு பொருளகளை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து பழிவாங்கும் நோக்கில் ஒருசில பொலிஸார் பொய் வழக்கு தொடுக்கின்றனர் எனப் பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

பொதுமக்களின் குற்றச்சாட்டில் சில உண்மைகளும் இருக்கின்றன என நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் -

பொலிஸ் தேடுதலின் போது கைப்பற்றியதாகத் தெரிவித்து போதைப்பொருள் என தொடர்ந்து 20,30 மாதிரிகளை இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு பொலிஸாரால் அனுப்பப்படுகிறது.

அனுப்பப்படும் மாதிரிகளில் சில சந்தர்ப்பங்களில் அது போதைப்பொருள் அல்லாதனவாக இருக்கலாம். ஆனால் இவ்வாறு அனுப்பப்படும் பொருட்கள் குடு(போதைப்பொருள்) அல்லாத விடயங்களையும் போதைப்பொருள் என அனுப்புகின்றனர்.



இது சட்டத்தை துஷ்பிரயோகம் செய்யும் நடவடிக்கையாகும். அதனால் இது தொடர்பான சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏனெனில் பெனடொல் குளிகை தூளை வைத்துக்கொண்டு சந்தேகத்தின் பேரில் ஒருவரை நீதிமன்றில் ஆஜர்படுத்தினால், அவர் போதைப்பொருளை வைத்திருந்திருந்த சந்தேக நபராக விளக்கமறியலில் வைக்கப்படுகிறார்.

பின்னர் பல மாதங்களுக்குப் பின்னர் இராசாயன பகுப்பாய்வு அறிக்கை வரும்போது, அது போதைப்பொருள் அடங்கியது அல்ல என உறுதிப்படுத்தப்படுகிறது.

சில பொலிஸார் பழிவாங்கும் நோக்கில் இவ்வாறான பொய் குற்றச்சாட்டுக்களை தெரிவித்து நீதிமன்றில் ஆஜர்படுத்துகின்றனர் எனப் பொது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இவ்வாறு தெரிவிக்கப்படும் முறைப்பாடுகளில் சில உண்மைகளும் இருக்கின்றன. அத்துடன் போதைப்பொருள் தொடர்பாக வழக்கு தொடுக்கும்போது பொலிஸார் பின்பற்றும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் பொது மக்களிடமிருந்து குற்றச்சாட்டு தெரிவிக்கப்படுகிறது. அதனால் இந்த விடயம் தொடர்பாக எதிர்வரும் காலங்களில் கடுமையாகக் கண்காணிக்க இருக்கிறோம். இந்த விடயங்களைக் கருத்திற்கொண்டு போதைப்பொருள் தொடர்பில் வழக்கு தொடுப்பதற்கு குறித்த சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது. - என்றார்.

# 'லிஸ்டீரியா' நோய் தொடர்பாக இரத்தினபுரியில் அச்சம் இல்லை!

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

இரத்தினபுரி மாவட்டத்தில் அல்லது அதனை அண்மித்த பகுதிகளில் 'லிஸ்டீரியா' என்ற நோய் பரவக் கூடிய அபாயம் இல்லை என்பதால் மக்கள் அது வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை என இரத்தினபுரி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஸ்ரீனி அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக சிவனொளிபாதமலை யாத்திரைக்கு சென்றவர்களில் சிலர் 'லிஸ்டீரியா' என்ற நோய் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ள தோடு, இதனால் இரத்தினபுரி வைத்தியசாலையில் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். குறித்த பெண் அண்மையில் சிவனொளிபாதமலை யாத்திரை சென்று வந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

அதற்கமைய அந்தப் பெண் உட்கொண்ட உணவுகள், உணவு பெற்றுக் கொண்ட கடைகள் தொடர்பாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றனர் எனவும் இரத்தினபுரி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஸ்ரீனி அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பொது சுகாதார பரிசோதகர்களால் வெள்ளிக்கிழமை சிவனொளி பாதமலையை அண்மித்த நல்லதண்ணி உள்ளிட்ட பகுதிகளிலுள்ள சிற்றுண்டிசாலைகளில் உணவுகளின் மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் சிவனொளிபாத மலை யாத்திரைக்கு சென்றவர்களில் சிலருக்கு வாந்தி , தலைவலி, காய்ச்சல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் போன்ற நோய் அறிகுறிகள் காணப்படுகின்றன என செய்திகள் வெளியாகின.

இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக வைத்தியசாலைக்குச் செல்லுமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இது 'லிஸ்டீரியா' என்ற நோய் என இனங்காணப்பட்டுள்ளதோடு, இதனால் ஒரு மரணம் பதிவாகியுள்ளதாக சுகாதார மேம்பாட்டு பணியகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தொற்று நோய் பிரிவு மற்றும் மருத்துவ ஆய்வு கூடம் என்பன தமது ஆய்வுகளை ஆரம்பித்துள்ளன.

இதனால் உயிரிழந்த பெண்ணுக்கு எவ்வாறு 'லிஸ்டீரியா' நோய் நிலைமை ஏற்பட்டது என்பது தொடர்பிலும், வேறு எவரேனும் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனரா என்பது தொடர்பிலும் இதன் போது ஆராயப்படவுள்ளது.

தரமற்ற உணவுகளால் உடலில் பற்றீரியா தொற்று ஏற்படுவதால் 'லிஸ்டீரியா' என்ற நோய் நிலைமை ஏற்படுவதாக வைத்தியர் கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## இலங்கைக்கு யார் உண்மையான நண்பர்?

இலங்கை உண்மையான நண்பர்களை தன்னோடு கூடவே வைத்திருப்பது மிக முக்கியமானது என்று தெரிவித்திருக்கிறார் இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர். புதுடில்லியில் நடந்த ஒரு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான உறவை "பிளட் இஸ் திக்கர் தான் வோட்டர்" என்ற சொற்றொடரின் ஊடாக விழித்தார். அதாவது அயல்நாடு என்பதிலும் பார்க்க உறவுக்காரர்கள் என்கிற வகையிலேயே இந்தியா இலங்கையைப் பார்க்கிறது என்று அவர் அர்த்தப்படுத்துகின்றார்.

இராமரையும் இராமாயணத்தையும் அடியொட்டிய பாரதீய ஜனதாக் கட்சியின் ஓர் அரசியல்வாதி என்கிற வகையில் அவர் இலங்கையையும் இந்தியாவையும் உறவினர்களாகப் பார்ப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இருக்கமுடியாது. அதுவும்போக வரலாற்று ரீதியாக இந்தியாவில் இருந்து அவ்வப்போது– இலங்கைக்கு தொடர்ந்தும் குடிபெயர்ந்து வந்து வாழ்ந்திருக்கிறார்கள்.

சிங்களவர்களின் தொடக்கமாக மகா வம்சம் கூறும் விஜயனும் அவனது தோழர்களும் இந்தியாவில் இருந்தே வந்தார்கள், அவர்களுக்கான பெண்கள் பாண்டிய நாட்டிலிருந்து வந்தார்கள், வர்த்தகத்திற்காகவும் மதப் பரப்புகைக்காகவும் இந்தியாவில் இருந்து வந்தவர்கள் இங்கேயே தங்கியிருக்கிறார்கள், 13ஆம் நூற்றாண்டு வரையில் மன்னர்களால் படைவீரர்களாகவும் இந்தியாவில் இருந்து பலர் தருவிக்கப்பட்டிருக்கிறார்கள், ஒரு கட்டத்தில் வடக்கே குடிகளின் பரம்பல் போதாது என்பதற்காகவும்கூட இந்தியாவில் இருந்து ஆட்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். 18ஆம்நூற்றாண்டில் தேயிலைத்தோட்டங்களில்வேலைசெய்வதற்காகவும் இந்தியாவில் இருந்து ஆட்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள். எனவே அவர்கள் வழி வந்தவர்கள் இலங்கை முழுவ–தும் பரந்து பரவிக் கிடப்பார்கள் என்பதால் ஜெய் சங்கர் சொல்லும் குருதி வழிச் சொந்தம் என்பதை மறுத்துவிட முடியாது.

இதனையே விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் "தொப்புள் கொடி உறவு" என்று ஒற்றை வார்த்தையில்தெரிவித்திருந்தார்.எனவேதாணாடாவிட்டாலும் தசையாடும் என்றவகையில் அந்தக் குருதி வழிச் சொந்தம் காரணமாக இலங்கைக்கு நெருக்கடியின்போது இந்தியா உதவுவதென்பது இயல்பனதே, அதில் தனித்துப் பார்ப்பதற்கு எதுவும் இல்லை என்பதுதான் அவரது கருத்து. அது மறுக்கப்படமுடியாத உண்மையும்கூட.

ஆனால் இந்தியாகூறும் இந்தக் குருதிவழிச் சொந்தம் என்கிறபார்வையில்இலங்கைஇந்தியாவைஅணுகுகின்றதா என்றால் பதில் இல்லை என்பதுதான். இலங்கை பெரும்பாலும் இந்தியாவை ஆக்கிரமிப்பாளராகவும் அகண்ட பாரதம் ஏன்கிற வகையில் அச்சுறுத்தலாகவுமே பார்க்கின்றது. அது இந்தியாவைப் பயன்படுத்திக்கொள்வதற்கு விரும்புகின்றதே தவிர, விசுவாசமாக இருக்கவேண்டும் என்று நினைத்ததில்லை. இந்தியா, அமெரிக்கா, சீனா இன்னும் ஏனைய மேற்கு நாடுகளுக்கு இடையே காணப்படும் போட்டியைப் பயன்படுத்திக்கொள்வதற்கே அது எதிர்பார்க்கின்றது. அதனாலேயே கொழும்பு சீனாவை களத்திற்குள் இழுத்து வைத்துள்ளது.

எனவே கொழும்புக்கு இந்தியா தேவையான நண்பனே தவிர, உண்மையான நண்பனல்ல. தனக்கு அவசி–யப்படும் போதெல்லாம் புதுடில்லியை மிக நெருங்கிச் செயற்படுவதும் பின்னர் விலகிச் செல்வதும் இலங்கைக்கு கைவந்த கலை. புதுடில்லி அதைப் புரிந்தும் தெரிந்தும் கொண்டாலும்கூட வெளிக்காட்டிக்கொள்வதில்லை என்பதுதான் உண்மை.

# மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை உருவாக்குவோம்!

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சபதம்

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக துறைசார் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்கள் அரசாங்கத்துக்கு அரசியல் ரீதியில் சாதகமாக அமையாது.

ஆனால் பொருளாதார ரீதியில் நாட்டுக்கு சாதகமாக அமையும். மக்கள் நிம்மதியாக வாழும் சூழலை இந்த ஆண்டுக்குள் உருவாக்குவோம்.

எமது அரசியல் எதிர்காலத்தை நாட்டு மக்கள் தீர்மானிப்பார்கள் என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி ஒத்துழைப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு–

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான அனைத்து விடயங்களையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளோம்.

ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் சிறந்த வழிகாட்டலுக்கு அமைய நாணய நிதியத்தின் நிபந்தனைகள் முறையாக செயற்படுத்தப்பட்டுள்ளன.

பொருளியல் ரீதியில் அறிவார்ந்தவர்கள் கூட தமது அரசியல் நோக்கத்துக்காக சர்வதேச நாணய நிதிய விவகாரத்தைத் தவறாக சித்திரித்துள்ளார்கள்.

பொய்யான கருத்துக்களை சமூகமயப்படுத்தியுள்ளார்கள். அனைத்து தடைகளையும் வெற்றிகொண்டு சிறந்த நிலையை எட்டியுள்ளோம்.

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுகள் வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொள்ளப்படுகின்றன. எதிர்வரும் 20 ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்று சபை கூட்டத்தில் இலங்கை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது. கூட்டத்தைத் தொடர்ந்து நிதி ஒத்துழைப்பு கிடைக்கப் பெறும் என எதிர்பார்க்கிறோம். நாட்டின் வெளி நாட்டு கையிருப்பு 20 மில்லியன் டொலராக வீழ்ச்சியடைந்தமை, சமூகக் கட்டமைப்பில் அத்தியாவசியசேவைகளிகாணப் பட்டநெருக்கடிநிலைஉள்ளிட்ட காரணிகளால்சர்வதேசநாணய நிதியத்தை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளியது.

அரசமுறைகடன்களைத் திருப்பி செலுத்த முடியாத நிலை உள்ளிட்ட பல்வேறு தவிர்க்க முடியாத காரணிகளை ஆராய்ந்ததன் பின்னரே சர்வதேச நாணய நிதியமே இறுதி தீர்வு என்று தீர்மானித்தோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக துறைசார் மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புக்கள் அரசாங்கத்துக்கு அரசியல் ரீதியில் சாதகமாக அமையாது.

ஆனால் பொருளாதார ரீதியில் நாட்டுக்கு சாதகமாக அமையும்.பிரபல்யமடையாத தீர்மானத்தை நாட்டுக்காக முன்னெடுத்தோம். நாட்டின் எதிர்காலத்துக்காகவே இந்த மறுசீரமைப்புக்களை நெருக்கடியான சூழ்நிலையில் முன்னெடுத்தோம்.

தற்போதைய மறுசீரமைப்புக்களால் நாட்டு மக்கள் குறிப்பாக நடுத்தர மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். நிலையான பொருளாதார மேம்பாட்டுக்காகவே அரசாங்கம் கடுமையான தீர்மானங்களை முன்னெடுத்தது. நாட்டு மக்கள் தற்போது உண்மை நிலையை விளங்கிக் கொண்டுள்ளார்கள். குடும்பம் நிம்மதியாக வாழும் சூழலை இந்த ஆண் டுக்குள் உருவாக்குவோம்.

# மக்கள் மத்தியில் செல்வதற்கு நாம் அச்சமடைய மாட்டோம்!

## நாமல் இறுமாப்பு



பொருளாதார முன்னேற்றத்துக்குத் தடையாக போராட்டங்கள் தீவிரமடைந்தால் எந்தத் தேர்தலையும் நடத்த முடியாத நிலை ஏற்படும்.

கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்கு தயாராக உள்ளோம், மக்கள் மத்தியில் செல்வதற்கு அச்சமடையப் போவதில்லை என முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலதேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ தலைமையில் பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் உள்ள பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற பேச்சின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலம் ஞாயிற்றுக்கிழமை நிறைவு பெறுகிறது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமு–னவின் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர்களுடன் விசேட பேச்சு மேற்கொண்டோம்.

உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் மாநகர ஆணையாளர்கள் மற்றும் பிதேச சபை செயலாளர்களிடம் ஒப்படைக்கப்படும் போது அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டியதன் அவசியம் தொடர்பாக ஆலோசனை வழங்கப்பட்டது.

மாகாண சபை தேர்தல் பல ஆண்டுகாலமாக பிற்போடப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாமல் ஜனாதிபதியின் பிரதிநிதிகளான ஆளுநர்களால் மாகாண சபை நிர்வாகம் முன்னெடுக்கப்படுகிறது. உள்ளூராட்சிமன்றங்களுக்கும் இந்த நிலை ஏற்படுமாயின் தேர்தல் முறைமை தொடர்பில் மக்கள் மாறுபட்ட கருத்துக்களைக் குறிப்பிடுவார்கள்.

அரசமைப்பின் பிரகாரம் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம். கட்சி என்ற ரீதியில் தேர்தலுக்குத் தயாராக உள்ளோம். ஜனாதிபதி தேர்தல், பொதுத்தேர்தல் அல்லது மாகாண சபைத் தேர்தல் என எந்தத் தேர்தல் இடம்பெற்றாலும் போட்டியிடுவோம்.

பொருளாதாரப் பாதிப்புக்கு தற்போது ஒப்பீட்டளவில் தீர்வு காணப்பட்டுள்ளது. நாடு வழமை நிலைக்கு திரும்பியுள்ளது. சுற்றுலாத்துறை முன்னேற்றமடையும் தருணத்தில் சுற்றுலாத்துறை மையங்களில் ஒரு தரப்பினர் திட்டமிட்ட வகையில் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள்.

பொருளாதார முன்னேற்றத்துக்குத் தடையாக போராட்டங்கள் தீவிரமடைந்தால் எந்த தேர்தலையும் நடத்த முடியாத நிலை ஏற்படும், ஆகவே, எதிர்க்கட்சிகள் பொருளாதார முன்னேற்றத்துக்கான செயற்பாடுகளுக்குத் தடையாக செயற்படுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். – என்றார்.

# தூன் ஜயவர்தனவின் நியமனம் சட்டவிரோதம்!

## பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு சுட்டிக்காட்டு

இலங்கைப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவிக்கு தூன் ஜயசூரியவை நியமிக்கும் போது திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன நிதியமைச்சர் மற்றும் நாடாளுமன்ற அரசமைப்பு பேரவை ஆகியவற்றை தவறாக வழிநடத்தி ஆணைக்குழுவின் சட்டத்தை மீறியுள்ளார் என இலங்கைப் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு –

இலங்கைப்பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு சட்டத்தின் 5(2) உறுப்புரையின் பிரகாரம் 'ஒரு நபர் அல்லது அவருடன் தொடர்புடைய நபர் பொதுப்பயன்பாட்டு துறை சார்ந்த ஏதேனும் ஒரு நிறுவனத்தில் அல்லது நடவடிக்கைகளில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நிதியியல் சார்ந்த அல்லது வேறு வழிகளில் தொடர்புடைய–வராகக் காணபடுவாராயின் அவர் ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்க கூடாது. – எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழுவின் சட்டத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் மின்சாரத் துறை கைத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட நிறுவனத்துடன் தொடர்புடைய தூன் ஜயசூரிய இலங்கை பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். சத்திய கடதாசி ஊடாக அவர் உறுப்பினர் பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

ஆணைக்குழுவின் சட்டத்துக்கு அப்பாற்பட்ட வகையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையிலான நபர்களை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமிக்க வேண்டாம் என ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி திறைசேரியின் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாகக் குறிப்பிட்டுள்ளார். ஆணைக்குழுவின் சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், நியமனம் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் திறைசேரி செயலாளரிடம் வலியுறுத்தினார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# ஆளுநர்களினால் மாகாண சபைகள் முழுமையாக பலவீனமடைந்துள்ளன!

## ரோஹித அபேகுணவர்தன குற்றச்சாட்டு

ஆளுநர்கள் நிர்வாகத்தால் மாகாண சபைகள் முழுமையாகப் பலவீனமடைந்துள்ளன, இந்நிலை உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தோற்றம் பெற இடமளிக்க முடியாது. பொது இணக்கப்பாட்டுடன் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு வெகு விரைவாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் வலியுறுத்தியுள்ளோம் என முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலதேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக் ஷ தலைமையில் பத்தரமுல்ல நெலும் மாவத்தையில் உள்ள பொதுஜன பெரமுன காரியாலயத்தில் இடம்பெற்ற பேச்சின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

பொருளாதாரப் பாதிப்பு தீவிரமடைந்து, மக்கள் போராட்டம் வெடித்து அதனூடாக ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிக் கொள்ளலாம் என எதிர்பார்த்திருந்தவர்களின் எதிர்பார்ப்பு முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், எமக்கும் அரசியல் ரீதியில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இருப்பினும் பொருளாதார மீட்சிக்காக அவர் எடுத்த கடுமையான தீர்மானங்களால் நாட்டில் ஜனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டு நாடு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தற்போதைய பிரதான பேசு பொருளாக உள்ளது. ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

நடைமுறையில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு வெகு விரைவில் தேர்தலை நடத்த வேண்டும் என ஆணைக் குழு விடம் வலியுறுத்தியுள்ளோம்.


உள்ளூராட்சி மன்றங்களின் நிர்வாகம் மக்கள் பிரதிநிதிகள் அல்லாத தரப்பினரிடம் ஒப்படைத்தால் மாகாண சபைகளுக்கு நேர்ந்துள்ள கதியே உள்ளூராட்சி மன்றங்களுக்கும் நேரிடும். ஆளுநர்களின் நிர்வாகத்தால் மாகாண சபைகள் முழுமையாகப் பலவீனமடைந்துள்ளன.

2019 ஆம் ஆண்டு பாரிய அர்ப்பணிப்புடன் கோட்டபய ராஜபக்ஷவை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தோம், ஆனால் அவர் எங்களின் பேச்சைக் கேட்கவில்லை. அவர் பதவி விலகியவுடன் நாடாளுமன்றத்தின் ஊடாக இடைக்கால ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவை தெரிவு செய்தோம், ஆகவே தேர்தல் தொடர்பில் அவரிடம் நாங்கள் உரையாடப் போவதில்லை. – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மார்ச் 20 ரஷ்யா செல்கிறார் சீன அதிபர் ஷி ஜின் பிங்



உக்ரைன் போா விவகாரத்தில் ரஷ்யாவை தனிமைப்படுத்த அமெரிக்காவும், மேற்கத்திய நாடுகளும் முயற்சி செய்து வரும் சூழலில், அந்த நாட்டுடனான உறவை மேம்படுத்துவதற்காக சீன அதிபா ஷி ஜின் பிங் மார்ச் 20 ரஷ்யா செல்லவிருக்கிறார்.

அங்கு ரஷிய அதிபா விளாடிமீா புடினுடன் ஜின்பிங் பேச்சு நடத்துவார். உக்ரைனில் அமைதியை ஏற்படுத்துவதற்கான முயற்சியிலும் அவா ஈடுபடுவாா என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்து சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தித் தொடாபாளா ஹுவா சுன்யிங் வெள்ளிக்கிழமை தெரிவித்ததாவது:

தங்கள் நாட்டுக்கு வர வேண்டுமென்று சீன அதிபா ஷி ஜின்பிங்குக்கு ரஷ்ய அதிபர் விளாடிமீா புதின் ஏற்கெனவே அழைப்பு விடுத்திருந்தார்.

அந்த அழைப்பை ஏற்று, ரஷ்யாவுக்கு 3 நாள் சுற்றுப் பயணமாக அதிபா ஷின் பிங் செல்கிறார். மார்ச் 20 முதல் 22 வரை அவா ரஷ்யாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்வார் – என்றார் அவர்.

இந்தச் சுற்றுப் பயணத்தின்போது உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான பேச்சிலும் ஷி ஜின்பிங் ஈடுபடுவார் என்று சீன வெளியுறவுத் துறை அமைச்சகத்தின் மற்றொரு செய்தித் தொடாபாளா வாங் வென்பின்னிடம் செய்தியாளாகள் கேட்டனா.

அதற்கு, “அனைத்து பிரச்சினைகள் மற்றும் சாச்சைகளுக்கும் ராஜீய ரீதியிலான பேச்சுவார்த்தை மூலம் மட்டுமே தீர்வு காண முடியும் என்று உறுதியாக நம்புகிறோம்” என்று அவா பதிலளித்தார்.

சீன அதிபரின் வருகை குறித்த அறிவிப்பை, ரஷ்ய அரசும் வெளியிட்டுள்ளது. இது குறித்து ரஷ்ய அரசுக்குச் சொந்தமான ‘டாஸ்’ செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியறிக்கையில், ரஷ்யாவுக்கும், சீனாவுக்கும் இடையிலான நல்லுறவு மற்றும் ஒத்துழைப்பின் எதிர்காலம் குறித்து இரு நாட்டு அதிபாகளும் நேரில் ஆலோசனை நடத்துவார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில், தங்களின் நெருங்கிய அண்டை நாடான உக்ரைன் இணைவது தங்களது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கருதுகிறது.

எனினும், நேட்டோவில் இணைவதற்கு வொலோதிமீா ஸெலென்ஸ்கி தலைமையிலான தற்போதைய உக்ரைன் அரசு விருப்பம் தெரிவித்தது.

அதையடுத்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 24ஆம் தேதி படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனின் லுஹான்ஸ்க், டொனட்ஸ்க், கொசான், ஸபோரிஷியா ஆகிய பிரதேசங்களைக் கைப்பற்றியது.

ரஷ்யாவின் இந்த ராணுவ நடவடிக்கையை மிகக் கடுமையாகக் கண்டித்து வரும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், ரஷியாவின் போரிடும் திறனைக் குறைக்கும் நோக்கிலும், சர்வதேச அரங்கில் ரஷியாவை தனிமைப்படுத்தவும் அந்த நாட்டின் மீது மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தன.

அத்துடன், ரஷியாவுக்கு எதிராகப் போரிட அந்த நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்கள் மற்றும் உளவுத் தகவல்களை அளித்து உதவி வருகின்றன.

ஆனால், உக்ரைன் மீதான ரஷிய படையெடுப்புக்கு சீனா இதுவரை கண்டனம் தெரிவிக்கவில்லை. ரஷ்யா மீது மேற்கத்திய நாடுகள் பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளதை மட்டும் சீனா விமாசித்து வருகிறது.

இந்த விவகாரத்தில் தாங்கள் நடுநிலை வகிப்பதாக சீனா கூறினாலும், அந்த நாடு ரஷ்யாவுக்கு ஆதரவான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பதாகவே மேற்கத்திய நாடுகள் சந்தேகிக்கின்றன.

உக்ரைன் போரில் பயன்படுத்துவதற்காக, ரஷ்யாவுக்கு சீனா ஆயுதங்கள் அளிக்கலாம் என்று மேற்கத்திய நாடுகளின் நிபுணாகள் அச்சம் தெரிவித்து வருகின்றனா.

இதற்கிடையே, உக்ரைன் போா தொடங்கிய கடந்த மாதம் 24ஆம் தேதியுடன் ஓராண்டு நிறவடைந்ததையொட்டி, அந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சமாதான திட்டமொன்றை சீனா வெளியிட்டது.

இருந்தாலும், அதில் தொலைநோக்கு பார்வை இல்லை என்றும், ரஷ்யாவுக்காக சீனா பரிந்து பேசுவதாகவும் கூறி அந்த திட்டத்தை உக்ரைன் நிராகரித்தது.

இந்தச் சூழலில், சீன அதிபா ஷி ஜின்பிங் ரஷியாவில் சுற்றுப் பயணம் மேற்கொள்ள விருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# புதைந்திருந்த பீரங்கி குண்டு வெடித்து தெற்கு சூடானில் 11 சிறுவர்கள் சாவு

வடகிழக்கு ஆப்பிரிக்க நாடான தெற்கு சூடானில் உள்நாட்டுப் போரின்போது வீசப்பட்டு வெடிக்காமல் போன பீரங்கி குண்டு, தற்போது சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருந்தபோது வெடித்துச் சிதறியதில் 11 பேர் உயிரிழந்தனர்.

இது குறித்து அதிகாரிகள் வெள்ளிக்கிழமை தெரிவித்ததாவது:

பாஹா அல்-கஸால் மாகாணத்தைச் சோந்த கிராமம் ஒன்றில் சிறுவாகள் வியாழக்கிழமை விளையாடிக்கொண்டிருந்தபோது அங்கிருந்த பீரங்கி குண்டு வெடித்துச் சிதறியது.

இதில் 11 சிறுவர்கள் உயிரிழந்தனா; காயமடைந்த மேலும் ஒரு சிறுவனுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது – என்றனர்.

சூடானிடமிருந்து தெற்கு சூடான் 2011ஆம் ஆண்டில் விடுதலை பெற்றது. அதையடுத்து, 2 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த நாட்டில் உள்நாட்டுப் போர் வெடித்தது. இதில் சுமார் 4 லட்சம் பேர் உயிரிழந்தனர்.

பின்னா போட்டிக்குழுக்கள் ஆயுதங்களைக் கைவிட்டு அமைதி ஒப்பந்தத்தை மேற்கொண்டாலும், உள்நாட்டுப் போரின்போது வீசப்பட்டு வெடிக்காமல் கிடக்கும் குண்டுகள், நிலத்தில் பதிக்கப்பட்டுள்ள கண்ணிவெடிகளால் இப்போதும் ஆபத்து நீடித்து வருவதாகக் கூறப்படுகிறது.



# இம்ரான் கானுக்குப் பிணை

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம் ரான் கானுக்கு 9 வழக்குகளில் அந் நாட்டு நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. இதையடுத்து அவரைக் கைது செய்யு நடவடிக்கையால் ஏற்பட்ட குழப்பங்கள் ஒரு முடிவுக்கு வந்துள்ளன.

பாகிஸ்தானில் பரப்புரையின் போது நீதித் துறையைச் சேர்ந்தவர்களுக்கும், பொலிஸாருக்கும் மிரட்டல் விடுத்த வழக்கு, பாகிஸ்தானின் பிரதமராக இம்ரான் கான் இருந்தபோது வெளிநாட்டுப் பயணத்தில் முக்கியப் பிரமுகரிடமிருந்து பெற்ற பரிசுப் பொருட்களை அரசு கருவூலத்தில் இருந்து மலிவான விலைக்குப் பெற்று கூடுதல் விலைக்கு விற்ற வழக்கு என்று 9 வழக்குகள் இம்ரான் கான் மீது உள்ளன.



இந்த நிலையில் கடந்த புதன் கிழமை தன் மீதான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க இம்ரான் கானுக்கு பாகிஸ்தான் நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியது. ஆனால் அவர் நீதிமன்றத்துக்கு வரவில்லை. இதையடுத்து இவ்வழக்கில் இம்ரான் கானை கைது செய்ய பாகிஸ்தான் பொலீஸார் அவரது இல்லம் சென்றனர். ஆனால் அவர்கள் இம்ரான் கானைக் கைது செய்யவிடாமல் அவரது தொண்டர்கள் பொலிஸாருடன் மோதினர். இதனால் அங்கு வன்முறை வெடித்தது.

அதன்பின் இம்ரான் செய்தியாளர்களிடம் பேசும்போது, என்னை கடத்தி படுகொலை செய்ய பாகிஸ்தான் போலீஸார் திட்டமிட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் தன்மீதான 9 வழக்குகளில் இருந்தும் பிணை கேட்டு லாகூர் உயர் நீதிமன்றத்தில் இம்ரான் கான் சார்பில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் இம்ரான் கானுக்கு அனைத்து வழக்குகளிலும் பிணை வழங்கினர். இந்த உத்தரவை தொடர்ந்து இம்ரான் கானின் தெஹ்ரீக்-இ- இன்சாப் கட்சி தொண்டர்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னதாக, பரிசுப் பொருள் முறைகேடு வழக்கில் பொலிஸாரின் கைது நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து வந்த பாகிஸ்தான் முன்னாள் பிரதமா இம்ரான் கான், லாகூா உயர்நீதிமன்றத்திற்கு வெள்ளிக்கிழமை வந்திருந்தார்.

பாகிஸ்தான் தெஹ்ரீக்-ஏ-இன்சாஃப் கட்சித் தலைவரான இம்ரான்கான் கடந்த 2018 பிரதமராகப் பதவியேற்றார். அப்போது, வெளிநாட்டுத் தலைவாகள் அளிக்கும் விலை உயாந்த பரிசுப் பொருள்களைப் பாதுகாத்து வரும் அரசுக் கருவூலமான தோகானாவிடமிருந்து பரிசுப் பொருள்களை மலிவு விலையில் வாங்கி சட்டவிரோதமாக விற்றார் இம்ரான் கான் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

பரிசுப் பொருள் முறைகேடு மட்டுமின்றி, பெண் நீதிபதிக்கு மிரட்டல் விடுத்ததாகவும் இம்ரான் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. இதில், பரிசுப் பொருள் வழக்குக்காக வரும் 18ஆம் தேதியும், பெண் நீதிபதியை மிரட்டிய வழக்குக்காக வரும் 21ஆம் தேதியும் இம்ரான் கானை தங்கள் முன் போலீஸா ஆஜாபடுத்த வேண்டும் என்று உத்தரவிட்டு இஸ்லாமாபாத் சென்ஸ் நீதிமன்றம் பிணையில் வெளிவர முடியாத கைது வாரண்டை கடந்த திங்கள்கிழமை பிறப்பித்தது.

# அமெரிக்காவின் 30 நகரங்களுடன் கைலாசா ஒப்பந்தங்கள் கைச்சாத்து

அமெரிக்காவின் நியூ ஜெர்சியில் உள்ள நெவார்க் நகரோடு சாமியார் நித்தியானந்தாவின் கைலாசா இரு தரப்பு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இதுபோன்று 30 அமெரிக்க நகரங்களுடன் கைலாசா ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டமை பரபரப்பை ஏற்றடுத்தியுள்ளது.

பாலியல் புகாரில் சிக்கிய சாமியார் நித்தியானந்தா இந்தியாவை விட்டு தப்பிச் சென்றார். அவர் தனது ஆசிரமத்தை ‘கைலாசா’ என்ற தனி நாட்டில் உருவாக்கியுள்ளதாக கூறி வருகிறார். ஆனால், இந்த இடம் பற்றி தெளிவான தகவல்கள் ஏதும் இல்லை. பல ஊகங்கள் வெளியாகி உள்ளன.

இந்நிலையில் ஜெனிவாவில் பெப்ரவரி 24 ஐ.நா அமைப்பின் பொருளாதார, சமூக, மற்றும் காலாசார உரிமைகள் குழு கூட்டம் நடந்தது. இதில் ‘கைலாசா குடியரசு’ சார்பில் நித்தியானந்தாவின் பிரதிநிதிகளாக பெண்கள் சிலர் கலந்துகொண்டனர்.

இந்த ஒளிப்படங்கள் நித்தியானந்தாவின் கீச்சகப் பக்கத்தில் வெளியிடப்பட்டன. வைரலாகின. பின்னர், ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் அமைப்பு, தங்கள் கூட்டத்தில் எந்த அமைப்பை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களை பேச அனுமதிக்கிறது. அப்படியே கைலாசா பிரதிநிதிகளும் பேசினார்கள் என்று தெளிவுபடுத்தப்பட்டது.



இதற்கிடையே அமெரிகக்காவின் 30 நகரங்களை ‘கைலாசா குடியரசு’ ஜனவரி மாதம் தனது சகோதர நகரங்களாக்கிக் கொண்டுள்ளது., அமெரிக்காவின் நியூஜெர்சி மாகாணத்தின் நெவார்க் நகரம் கைலாசா இடையே இருதரப்பு மக்களின் மேம்பாட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நித்தி சீடர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவில் உள்ள சமூகங்களுக்கும் மற்ற நாடுகளில் உள்ள சமூகங்களுக்கும் இடையே பல்வேறு கலாச்சாரங்களை அறிந்துகொள்ளும் வாய்ப்பாக உருவாக்கபட்டுள்ள சிஸ்டர் சிட்டிஸ் என்ற அமைப்பின்படி இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது. நெவார்க் நகர மேயர் ரஸ் ஜெ.பராக்கா மற்றும் கைலாசா பிரதிநிதி விஜய்ப்ரியா நித்தியானந்தா இருவரும் ஒப்பந்தம் செய்தனர். இதன் மூலம் கைலாசாவை இறையாண்மை பெற்ற நாடாக அமெரிக்கா அறிவித்துள்ளதாக நித்தி சீடர்கள் பெருமிதம் தெரிவித்து-வந்த நிலையில், இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தகவல் வெளிவந்துள்ளன.

கைலாசா ஒரு உண்மையான நாடு அல்ல என்பதைக் கண்டுபிடித்ததால் இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளதாக நெவார்க் நகர மேயர் தெரிவித்துள்ளார். கைலாசாவால் தாங்கள் ஏமாற்றப்பட்டதை ஒப்புக்கொண்டுள்ள மேயர் ரஸ் ஜெ.பராக்கா, நெவார்க் ஒரு மோசடிக்குள் வீழ்ந்துகி விட்டது என்றும் தெரிவித்துளளார்.

# ஊடுருவ உள்ள துருவ ஒளிகள்

பூமியின் வட, தென் துருவ பகுதிகளில் ஒன்றை மற்றொன்று துரத்தி ஓடிக் கொண்டிருக்கும், வட்டமடித்துக் கொண்டிருக்கும் துருவ ஒளிகளை பற்றி கேள்விப்பட்டிருப்பீர்கள்.. எப்போதும் ஆச்சரியத்தை ஏற்படுத்தும் இந்த துருவ ஒளிகள் வழக்கத்துக்கு மாறாக பூமியின் சில பகுதிகளிலும் தோன்றவுள்ளன.

அதாவது, பூமியிலிருந்து சூரியனின் வெகு தொலைவு பகுதியில் ஏற்படும் ஒளிவட்ட நிகழ்வுகளால், பூமியின் வடக்கு பகுதிகளில் உலவிக் கொண்டிருக்கும் துருவ ஒளிகள் தெற்கு வரை சில நாட்கள் விரிவடைய உள்ளன.

இந்த நிகழ்வுகள் 10 வருடங்களுக்கு ஒருமுறையோ அல்லது இரு முறையோ நடக்கின்றன என்று அறிவியல் அறிஞர்கள் தெரிவிக்கின்றன.

இதன் விளைவாக துருவ ஒளிகள் கனடா வரை தெரியவுள்ளன. மேலும், அமெரிக்காவின் 48 மாகாணங்களிலும் துருவ ஒளிகள் தெரியவுள்ளன. நியூயார்க் நகர மக்களும் துருவ ஒளிகளை ரசிக்க உள்ளனர். துருவ ஒளிகளின் இந்த நீண்ட பயணத்தினால் ஏற்படும் உயர்ந்த புவி காந்த செயல்பாடினால் வானொலி அலைவரிசை மற்றும் செயற்கைக்கோள் தகவல் தொடர்புகளும் பாதிக்கப்படலாம் என்று கூறப்படுகிறது.


துருவ ஒளிகள், பூமியின் மேற்பரப்பில் 64 டிகிரி மற்றும் 70 டிகிரி வடக்கு அட்சரேகைகளுக்கு இடையில் அடிக்கடி நிகழ்கின்றன. அதாவது ஆர்க்டிக், அலாஸ்கா, வடக்கு கனடா, ஐஸ்லாந்து, நார்வே, ஸ்வீடன், பின்லாந்து மற்றும் ரஷ்யாவில் உள்ள லாப்லாண்ட் ஆகிய இடங்களில் செப்டம்பர் மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் உச்சபட்ச காட்சிகளாக தெரியும்.

அரோரா என்ற அழைக்கப்படும் இந்த துருவ ஒளிகள் பூமியின் துருவப் பகுதிகள் முழுவதும் நீள்வட்ட வடிவத்தில் தெரியும். இருப்பினும், புவி காந்த புலங்கள் எவ்வளவு தீவிரமாக இருக்கிறதோ அதற்கேற்ப துருவ ஒளிகள் தெற்கு நோக்கி நீளும் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

துருவ ஒளி (அரோரா) எப்படி தோன்றுகிறது? –பூமிப் பந்தின் மேலடுக்கில் காணப்படும் ‘அயன்’ (Ion) என்றழைக்கப்படும் கண்ணுக்குப் புலப்படாத துகள்கள் பூமியின் காந்த புலத்தின் மிது மோதும்போது இந்த துருவ ஒளிகள் ஏற்படுகின்றன.

# ரஷ்ய அதிபர் புடினை கைது செய்ய சர்வதேச பிடியாணை பிறப்பிப்பு

உக்ரைனுக்கு எதிராக போா தொடுத்துள்ள ரஷ்ய அதிபா விளாதிமீா புதினுக்கு சாவதேச குற்றவியல் நீதிமன்றம் போா குற்றத்துக்கான கைது ஆணையை பிறப்பித்துள்ளது.



அதில், போா நடைபெற்று வரும் உக்ரைன் பகுதிகளை ஆக்கிரமித்ததன் மூலம் அங்குள்ள குழந்தைகளை அபகரித்து சென்றதாகவும், சட்டவிரோதமாக நாடு கடத்தலில் ஈடுபட்டதாகவும் புதின் மீது போா குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இதே போல், ரஷ்யாவின் குழந்தைகள் உரிமைகள் ஆணையா மரியா அலேக்சியிவ்னா லவோவா மீதும் இதே குற்றச்சாட்டுக்காக கைது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. முதல் கட்ட விசாரணையில் இருவா மீதும் போா குற்றம் புரிந்ததற்கான முகாந்திரம் உள்ளது என்று சாவதேச குற்றவியல் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# துருக்கியில் மீண்டும் இன்றும் நிலநடுக்கம்

துருக்கியின் கோக்சன் மாவட்டத்தின் தென்மேற்கில் மீண்டும் இன்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புவியியல் ஆய்வு மையம் வெளியிட்ட தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கோக்சன் மாவட்டத்தின் தென்மேற்கே 6 கி.மீ தொலைவிலும், 7 கி.மீ ஆழத்திலும் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவுகோலில் 4.4 ஆகப் பதிவாகியுள்ளது.

பெப்ரவரி மாத இறுதியில் துருக்கி மற்றும் சிரியாவை தாக்கிய நிலநடுக்கதின் பாதிப்பில் இருந்து மீளாத நிலையில், மீண்டும் மீண்டும் துருக்ககியில் நிலநடுக்கம் ஏற்படுவதால் மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்பட்டுள்ளது.

பெப்ரவரி நிலநடுக்கத்தால் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பல ஆயிரக்கணக்கான கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

இன்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் எந்தவித பாதிப்பும் சேதமும் ஏற்படவில்லை என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

